புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ மே ௴ 30 ௳ [ந. 97

பிரஸங்கம் **XCVII.**

# தேசீய யுத்த முன்னணி.

---

I

## சென்னையில் மேன்மை தங்கிய கவர்னர் ஆரம்பம் செய்தார்.

"தேசீய யுத்த முன்னணியை இன்று மதராஸில் ஆரம்பிக்கிறேன். மேன்மை தங்கிய வைஸிராய் ஏற்கனவே சொல்லிய பிரகாரம், இது நாடெங்கும் பரவச் செய்யப்படும். தேசத்திற்கு வந்திருக்கும் பிரகிருத ஆபத்தைத் தவிர்ப்பதற்குத் தயாராக இருக்கும் நல்லெண்ணம் படைத்தயாவரையும் ஒன்று சேர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

"இந்தியாவில் காணப்படும் அரசியல் கட்சிகளுக்குள் பரஸ்பரம் சச்சரவுகளை வைத்துக்கொள்ளாமல், இந்தியாவின் அருகிலேயே வந்து பயமுறுத்தும் ஜப்பானியரின் கொடுமைகளையும் நாஸித் தீங்குகளையும் எதிர்த்துப் போராட வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு தேசாபிமானிக்கும் ஏற்பட வேண்டுமென்றும் அவர்களுடைய ஆதரவு எனக்கு வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இம்மாகாணத்தில், தமிழ் தேசம், ஆந்திர தேசம் முதலிய இடங்களிலுள்ள பலதரப்பட்ட பிரதிநிதிகளையும் நான் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். அரசியல் வாழ்க்கையில் அவர்கள் ஒன்றுபட்டிருந்ததில்லை. ஆனால் தேசாபிமான காரணமாயும், வெற்றி பெறவேண்டுமென்பதை முன்னிட்டும் அவர்கள் இன்று ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

## இதன் நோக்கங்கள்.

"ஜனங்களிடையே யுத்த எதிர்ப்பு சக்தியை வலுவடையச் செய்வதும், பேச்சு, எழுத்து, வதந்தி, இவற்றின் மூலம், நடைபெறும் 5-ம் படை வேலைகளை அறவே களைவதும் இந்த முன்னணியின் முக்கிய நோக்கங்களாகும். ஜனங்களிடையே நம்பிக்கை, தைரியம், பொருமை முதலிய குணங்களை உண்டாக்கி, நாஸித்துவத்தையும், பாஸிஸ்டு தன்மையையும் எல்லா வழியிலும் எதிர்த்து முடிவாக சர்வாதிகார கொள்கை அழியும்படி செய்வதும் நோக்கமாகும்.

"ஆகவே வெளியேயிருந்து ஏற்படக்கூடிய அபாயத்தை எதிர்த்தும், உள்நாட்டில் தோல்வி மனப்பான்மையை எதிர்த்தும் திடசித்தம் ஏற்படவேண்டுமென்றும் இம்முன்னணி விரும்புகிறது.

"தேசத்தின் யுத்த சக்தியைத் தளரச்செய்யும் பேச்சு, எழுத்து, நடத்தை முதலியவைகளை வெளிப்படுத்திப் போக்கடிக்கவேண்டும். அதோடு முன்னணி மெம்பர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய அன்றாட அலுவல்களில் செய்யும் எழுத்து, பேச்சு முதலியவைகளால் ஜனங்களிடையே வெற்றி உணர்ச்சி ஏற்படும்படி செய்யவேண்டும் சர்வாதிகார நாடுகளின் தோல்விக்காக யாவரும் பாடுபடும்படி துரிதமாகப் பரிசிரமப்படவேண்டும். இவ்வித மனப்பான்மையுள்ளவர்கள்தான் நிஜமான அன்பர்கள் என்பதையும் தெளிவாக்கவேண்டும்".

## இதுதான் பூராவேலை.

"இந்த முன்னணி உத்தியோக பூர்வமான அங்கீகாரம் பெற்று ஆதரிக்கப் பட்டு வந்தாலும் உத்தியோகப் பற்றில்லாதவர்களே இருக்கின்றனர். சுயமதிப்பு, இந்தியாவின் பிற்கால நிலை இவைகளைப் பிரதானமாக வைத்துக்கொண்டு பிர மோஷன், அரசியல், அமைப்பு, உத்தியோகம் முதலியவைகளைக் கவனியாது, பூரா சேவை செய்யக்கூடியவர்களே இதில் இருக்கின்றனர்.

"யுத்த சம்பந்தமான செய்திகளும், அபிப்பிராயங்களும் சரியாகப் பரப்பு வதற்கான அக்கரை எடுத்துக்கொள்ளும் ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்களின் உதவியை நாடுவதும் இதில் சேர்ந்தவர்களின் நோக்கமாகும். இப்படிச் செய் வதால் இந்நாட்டில் விஷயம் தெரியாதவர்களே இருக்கமாட்டார்கள்.

"சேனை, கடற்படை, விமானப்படை, பொதுஜனப்பாதுகாப்பு முதலியவை களுக்காக ஆட்களைச் சேகரம் செய்யும் முயற்சிக்கு அவர்கள் உதவி செய்வார்கள்.

"போர்வீரனாக இருப்பதாலோ, உத்தியோகம் வகிப்பதாலோ, வியாபாரம், தொழில் முதலியவைகளை நடத்துவதாலோ, இந்த தேசீய முன்னணியைவிட்டு விலகி நிற்கவேண்டியதில்லை".

## உயர்ந்த லக்ஷியம்.

"ஒன்றுபட்டு நிற்பதும், யுத்த உணர்ச்சியை அதிகமாக்கிக்கொள்ளுவதும் தான் இதன் முக்கிய நோக்கங்களாகும். இதுதான் நமது லக்ஷியம். அதனால் நமக்குள் காணப்படும் கட்சிப் பிரதிகட்சி சண்டையை மறந்து தைரியமாகவும், சந்தோஷமாகவும் ஒத்துழைத்து, ஜப்பான் முதலிய நமது சத்துருக்களை எதிர்த்து அடிப்பது சுலபமாகும்.

"இதனால்தான் நான் இம்மாகாணத்தில் தலைமையை வகிக்கிறேன். "இந்தியாவின் வெற்றியை முன்னிட்டு இந்த முன்னணியில் சேருங்கள்" என்றுதான் நான் சொல்லுகிறேன்.

---

II

# மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர் செய்த சொற்பொழிவு.

"இந்த முன்னணியை ஆரம்பித்ததால் மேன்மை தங்கிய வைஸிராய் பிரகிருத சமயத்திற்கு ஒரு திருஷ்டாந்தமாகவே விளங்குகிறார். ஆகவே நானும் இந்த இயக்கத்திற்கு இம்மாகாணத்தில் தலைமை வகிக்கிறேன். இந்த இரண்டு வருஷ காலமாக இம்மாகாண வாசிகளான நாம் செய்துவந்த முயற்சியைப் பற்றி கொஞ்சமும் வெட்கப்படவேண்டியதில்லை. நாம் செய்துவரும் தொண்டுகளைப் பற்றி நாம் மிகவும் கௌரவமாகவே எண்ணிக்கொள்ளலாம். இனி வரப்போகும் ஆபத்துக்களிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக நாம் நம்முடைய விரோதங்களை மறைத்து வைத்துக்கொண்டு நடந்து கொள்ளுவதென்பது ஸ்திரீ, புருஷர்கள் யாவரின் கடமையாகும்.

## இந்தியாவின் வருங்காலம்.

"இந்த தேசத்தின் தன்மையிலும், இந்தியாவின் வருங்காலத்திலும் நம்பிக்கை கொண்ட யாவரும் இதில் சேரலாம். தேசபக்தி கொண்ட யாவரும் தங்களால் முடிந்ததைச் செய்ய முன்வரலாம்.

"ஒவ்வொருவரும் யுத்த முன்னணியில் செய்ய வேண்டிய வேலை இருக்கிறது. நாம் யாவரும் இதில் சேரமுடியாத போனாலும், யுவர்களை இதில் சேர்க்கும் படி பெற்றோர்களைத் தூண்டலாம். இந்த யுத்தம் இன்னும் முடியாததால் திட சரீரம் வாய்ந்த யாவரும் இதில் சேர்ந்து கொள்ளலாம். யுத்தம் முடிவதற்குள் இன்னும் ஏராளப் பேர் தேவையாக இருக்கும்.

"அடுத்த படியாக ஜனங்களை யுத்தத்தைப் பற்றிய சிந்தனை வாய்ந்தவர்களாகச் செய்யவேண்டும். இது சமாதான காலமல்லாததால் ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அநேகம் ஏற்படலாம். சிக்கனமாக அனைவரும் இருந்து சேமிப்பதை யுத்தத்திற்கு உதவ வேண்டும். ஏற்கனவே இருந்ததைப் பற்றி மறந்து தற்போதுள்ள நிலைமையைக் கவனித்து வருங்காலதிற்கேற்றவாறு நடந்துகொள்ளுவதுதான் நமது கடமையாகும்".

## உணவுகளை அதிகம் உற்பத்திசெய்யுங்கள்.

"முக்கியமாக எல்லா ஜில்லாக்களிலும் எல்லாவிதமான உணவுப்பண்டங்களையும் அதிகம் உற்பத்திசெய்யவேண்டுமென்று ஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். புதிதாக ஒரு ஏக்கரா நிலம் சாகுபடி செய்தாலும் இம்மாகாணத்திற்கு நன்மை யேற்படும்.

"தோல்வி மனப்பான்மையைப் போக்க நம்மாலானதைச் செய்யவேண்டும். இவ்வித மனப்பான்மை ஜப்பானியருக்கு சிநேக பாவத்தைத் தெரிவிக்கும். இதைப்போல் ஆதாரமற்ற வதந்திகளும் ஜனங்களிடையே பரவுவதால் எதிரிக்குத்தான் சாதகமாகும். ஜப்பானியர் இந்த நாட்டை விட்டு வெளியேறுகையில் ஏஜெண்டுகளை இங்கே விட்டுச் சென்றனர் என்பதில் சந்தேகமில்லை. அவர்களே இங்கு பீதியை உண்டாக்கி முடிவில் ஜப்பானியர் வெற்றி பெறுவார் என்று சொல்லிவருகின்றனர். இவ்வதந்திகள் நொடியில் எங்கும் பரவுகின்றன. நாம் அவைகளை அடக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் மூட்டை மூட்டையாகப் பொய் பிரசாரத்தைச் செய்யும் ஜப்பானிய டோக்கியோ ரேடியோவைக் கேட்கவேண்டாம். அகில இந்திய ரேடியோவும், பி. பி. ஸி. யும்தான் உண்மைகளைப் பரப்புகின்றன. ஒன்றையும் மறைப்பதில்லை. அவை நமது மனதிற்கு கசப்பாகத்தானிருக்கும்.

"தற்போது இங்கே அதிகமாகக் காணப்படுவது தோல்வி மனப்பான்மை. அதாவது இதுவரை ஜப்பானியர் பெரும் வெற்றிகளை அடைந்திருப்பதாகவும், முடிவிலும் அவர் தான் வெற்றிபெருவார் என்றும் நினைக்கப்படுகிறது. அப்படி வெற்றி பெற்றதும் ஜப்பானியர் இந்தியாவுக்கு வந்தால் "நான் உனக்கு விரோதமாக ஒன்றையும் செய்யவில்லை என்று" ஜப்பானியரிடம் சொல்லி நல்ல பேர் வாங்கலாமென்று நினைக்கின்றனர். இவ்வித எண்ணம் வீண் பயங்குள்ளித்தனத்தைத் தெரிவிப்பதாகவே நினைக்கிறேன். தேசாபிமானம் படைத்தவர்கள இப்பேர்ப்பட்ட அபிப்பிராயத்தைப் போக்கடிக்க வேண்டும். எவ்வித கஷ்டம் வந்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் :—

"ஜப்பானியர் வெற்றிபெற முடியாது என்றே நான் சொல்லுகிறேன். ஜப்பான், ஜெர்மனி, இதாலி யாவருக்கும் உலகங்களை ஆக்கிரமிக்க வேண்டுமென்றும், அப்படி ஆக்கிரமித்து, அந்த நாடுகளைக் கொள்ளையடிக்க வேண்டுமென்றும் நினைப்பு இருக்கிறது.

"ஆகவே இதுவரை ஆக்கிரமித்த நாடுகளில் செய்வதைப்போலத்தான் இங்கும் செய்வார்கள். ஜப்பானியர் ஜயிப்பார்களென்றும் சொல்லிக்கொண்டால் நமக்கு ஏற்படும் தீங்கை கவனித்துப்பாருங்கள். அவர்கள் சில வெற்றிகளை யடைந்திருப்பதும் உண்மை. நாம் சில தோல்விகளை யடைந்ததும் உண்மை. இருந்தாலும் இந்த யுத்தம் முடிந்தபாடில்லை. அப்போது ஜப்பானியர் தோற்றுப் போவதைப் பார்ப்பீர்கள். முதலில் ஜெர்மனி தோற்றால் மற்ற நாடுகளும் தானகவே தோல்வியடையும் என்பதில் சந்தேகமில்லை."

### அச்சு நாடுகளை முறியடிக்கப்படும்.

"தற்போதுள்ள நிலைமையிலிருந்து அச்சுநாடுகள் கீழே உருட்டித்தள்ளப் படுமென்ற நம்பிக்கை யிருக்கிறது. இவ்விதம் நினைத்து வரும் நேசநாடுகள் யாவும் ஒன்றுபட்டிருக்கின்றன இந்த தேசீய முன்னணியை ஆரம்பிக்கும்போது அவ்வித ஒற்றுமை வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கிருப்போர் யாவரும் ஒற்றுமைப்பட்டிருங்கள். எதிரியைத் தோற்கடிப்பதற்கான விதமெல்லாம் நடந்துகொள்ளுங்கள்.

"ஏராள பலத்துடன் எல்லா நேசநாடுகள் ஒன்று சேர்ந்திருப்பதால் எதிரிக்கு சீக்கிரம் தோல்வி ஏற்படுவது நிச்சயம். தினமும் நமது பலம் விருத்தியாகிக் கொண்டே போகிறது.

"நமக்குள்ள பலத்தை இன்று நீங்கள் பார்வையிட்டீர்கள். இதற்குமுன் இவ்விதம் பலம் கொண்டதில்லை. இந்தியாவின் பாதுகாப்பை முன்னிட்டு தினமும் முஸ்திப்பு வந்துகுவிகிறது. இனிமேல் தற்காப்பிலேயே இருக்க முடியாது. முன்னேறிப் போர் நடத்தப் போகிறோம். இந்திய மக்களின் உதவியும் நமக்கு இருந்தால் எவ்வளவு நலமென்று யோசியுங்கள். துருப்புகளுக்கும் அதிக உத்ஸாக மளிக்கும்".

### இனி யுத்தமே நேராது.

"இந்த யுத்தம் எப்போது முடியுமென்று தெரியாது. நாம் தினமும் அபிவிருத்தி யடைகிறோம். ஜெர்மனி எல்லா பலத்தையும் திரட்டி விட்டது. இனி அதனால் அதிகம் சேகரிக்க முடியாது. ஏற்கனவே பல தோல்விகளை அடைந்திருந்தாலும் நேசநாடுகளின் பலத்தினாலும் ஒற்றுமையாலும் முடிவான வெற்றியடையப்படும். அப்போதுதான் உலகில் மறுபடி சண்டைகளே நேராமலும், நாஸிகளோ, ஆக்கிரமண ஆசைகொண்ட வேறு நாடுகளோ முன்னேற முடியாமல் செய்யப்படும். பல தலைமுறை வரையிலும் உலகில் யுத்தமே ஏற்படாமல் செய்யப்படும்."

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 23—5—42-லிருந்து 29—5—42-வரை.

**சைனா.**—மேற்கே யூனான் மாகாணத்திலிருந்தும், கிழக்கே செகியாங் மாகாணத்திலிருந்தும் தாக்கப்படுகிறது. இவை இரண்டு பிரதேசங்களுக்கும் 1,300 மைல் தூரமிருக்கிறது.

**யூனான் மாகாணத்தில்** பர்மா ரஸ்தாவிலுள்ள டாலிபூ (Talifu)-வை நோக்கி தாக்குதல் செய்யப்படுகிறது. இப்பிரதேசம் மலைகளும், நதிகளும் அடர்ந்துள்ளது. எதிரியை களைக்கச் செய்யும் சீன யுத்த தந்திரத்திற்கு இது லாயக்கானது. அதிகமான ஆயுதங்களை உபயோகிக்க முடியாததால் ஜப்பானியர் அமெரிக்க (A. V. G.) படையாலும், சீன விமானப் படையாலும் தாக்கப்படுகின்றனர். பர்மாவில் இருந்தமாதிரி இங்கே ஜப்பானியர்களால் சமாளிக்க முடியாது. பிரதேசமும் வசதியாக இல்லை. மழைகாலம் வந்துவிட்டது. குளிர் ஜ்வரம் பரவிவிடும்.

இவ்வாரத்தில் காரவான் ரஸ்தாவில் கன்லான்ஹூ (Kanlanhu)வை சீனர்கள் பிடித்துக்கொண்டு டெங்சுங், லுங்லிங இரண்டையும் தாக்கினார்கள். லாங்கின் வரை ஜப்பானியர் முன்னேறியதாகச் சொல்லப்படுகிறது. சீனர்கள் இவர்களைத் துரத்தி வருகின்றனர்.

**செகியாங்கில்** கின்ஹ்வாபூ (Kinhwafu)-வை நோக்கி தாக்குதல் நேருகிறது. இதுதான் இம்மாகாணத்திற்குத் தலைநகர். சுகி, ஷென்ஷியன், துங்ளு, யீவு டீண்டா முதலியவைகளை எதிரி பிடித்திருக்கிருன்.

மேலும் மின்நதி முகத்துவாரத்திலுள்ள சௌனஷி தீவிலும் துருப்புகளை இறக்கியிருக்கிருன். இது புகியாங் மாகாணத்திலிருக்கிறது. பூசௌக்கு (Foochow) த் தெற்கிலுள்ள மேமோய் (Mamoi)-யில் குண்டுகள் போடப் பட்டன.

பார்மோஸாவிற்கு அருகில் போக்குவரத்துக் கப்பல்களும் சண்டைக்கப்பல் களும் சேமிக்கப்பட்டுள்ளன.

**பர்மா.**—மாண்டலேக்கும். லாஷியோவிற்கும் இடையிலுள்ள நவான்கியோ (Nawngkio) நகரை சீனத்துருப்புகள் தாக்கின. வடக்கு பர்மாவில் மியிட்கியிஞ, டயாங்ஜூப், இரண்டு நகரங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கின. 6 தினங்களில் அக்யாப்பில் 7 தடவை குண்டுகள் போடப்பட்டன. மௌங்கிதாங் (Maung-gyithaung), கயான்க்ப்யூ (Kyankpyu), நகரங்களும் தாக்கப்பட்டன. சிந்து வின், கலீவா, மயூ நதிகளில் சென்ற துருப்புகளேற்றிய எதிரி ஸ்டீமர்கள் தாக்கப் பட்டன.

ஜெனரல் வேவலுடன் கலந்து பேசுவதற்காக புது டெல்லிக்கு வந்திருக்கும் ஜெனரல் ஸ்டில்வெல் பின்வருமாறு சொன்னர். பர்மாவைத் திருப்பிப் பிடித்து விடலாம், என்ருர். அமெரிக்க (A. V. G) படையை பெரிய விமானப்படையாக மாற்றுவதற்காக அமெரிக்காவிலிருந்து உபரியாக பாம்பர்களும், பைடர்களும் வருவதாகவும் சொன்னர்.

**இந்தியா.**—பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் ஜெனரல் வேவல் பின்கண்ட செய்தியை தெரியப்படுத்தினர் :—' எல்லாவிதமான ஆயுத முஸ்தீப்பும், விமான எதிர்ப்பு படையினரும் ஏராளமாக பிரிடனிலிருந்து வந்திருக்கிறது. சிங்கப்பூரில் செய்திருந்த முஸ்தீப்பைவிட மிக அதிகமாகவே ஸிலோன், கல்கத்தா முதலிய இடங்களில் செய்யப்பட்டிருக்கின்றன '.

**ருஷ்யா.**—கார்கவ் யுத்தம் மூன்ருவது கட்டத்தை யடைந்திருப்பதாகச் சொல்லலாம். முதல் கட்டத்தில் ருஷ்யர்கள் வெற்றிகரமாக முன்னேறினர். இரண்டாம் கட்டத்தில் இஸூம்-பர்வென்கோவாவில் ஜெர்மானியர் குறுக்கு எதிர்ப்புகளைச் செய்தனர். தற்போதுள்ள மூன்ருவது கட்டத்தில் ருஷ்யர்களின் இடது பக்கத்தில் ஜெர்மன் தாக்குதல் அதிகரித்திருக்கிறது. இஸையும் (Izyum), பர்வென்கோவா பிரதேசங்களுக்கு இடையில் பிரமாத குறுக்கு எதிர்ப்புகள் நேர்ந்திருக்கின்றன. ஏராளமாக டாங்கிகளையும், படைகளை யும் ஜெர்மானியர் இரையாக்கி வருகின்றனர். மூன்று ருஷ்யப்படைகளை சூழ்ந்துகொண்டதாக அவர்கள் சொல்லுவது ஊர்ஜிதமாகவில்லை. ஓரிடத்தில் ருஷ்ய முன்னேற்றப்படையைப் பிளந்துகொண்டு போக்குவரத்து நிலைகளுக்கு அப்பால் இருப்பதுதான் உண்மை. ருஷ்யர்களும் ஏற்கனவே பிடித்துள்ள பிரதேசத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள தற்காப்பு நிலையிலிருக்கின்றனர்.

ஸ்மாலென்ஸ்க், ஓரெல் முதலிய இடங்களில் சிறு சண்டைகளும் நடக்கின் றன.

**ஜெர்மனி.**—இங்கே அதிக சிரமநிலைகள் காணப்படுகின்றன. ஸ்டாக் ஹோமிலிருந்து கிடைத்த செய்தியின்படி ஹிட்லர் அதிதுரிதமாக பெர்லினை விட்டுப் புறப்பட்டு யுத்தரங்கத்திற்குச் சென்று சைனியத் தலைவர்களுடன் கலந்து பேசினர். ஏனென்ருல் இவன் தலைமைப் பதவியை விட்டுவிட வேண்டுமென்று அவர்கள் சொன்னர்களாம். விவசாய மந்திரி (போக்கு வரத்து மந்திரி) சரீர அசௌக்கியத்தை முன்னிட்டு பதவி இழந்தனர். ரகசியப் போலீஸ் தலைவன் ஹீட்ரிச் காயம் பட்டிருக்கிருன். ரீஷ்டாக்கில் ஹிட்லர் செய்த சொற்பொழிவிற்குப் பிறகு பெர்லின் கோலோன், ஹனேவர், பிராங் போர்டு முதலிய இடங்களிலுள்ள நீதி மந்திரிகள் கைதிசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடைய அதிகாரத்தைத் தயவுடன் செலுத்தியதுதான் குற்றமாம். மான்ஹீமில் 14 உள்நாட்டு வாசிகளுக்கு கொலைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அயல்நாட்டு ரேடியோக்களைக் கேட்டதும், பொதுவுடமைக் கட்சியில் ஈடுபட்டதும் குற்றமாம்.

ருஷ்யக் கொள்கைகளை அழிப்பதற்காக ஜெர்மானியர் ஐரோப்பாவை ஒன்று சேர்ப்பதாகச் சொல்லுவது வீண் ஆடம்பரம்தான். ஐரோப்பா பூராவிலும் 3,00,000 பேர்கள்தான் முன்வந்திருக்கின்றனர். இதில் 2,00,000 ருமேனியர்களும், 50,000 ஹங்கேரியர்களும் 40,000 இதாலியர்களும், 10,000 ஸ்லாவாகியர்களும், 5,000 ஸ்பானியர்களும் அடங்கியிருக்கின்றனர். பெல்ஜியம், நார்வே ஹாலந்து முதலிய இடங்களிலிருந்து சொற்பமான ரெக்ரூட்கள்தான் வந்திருக்கின்றனர். டேனிஷ்காரரின் எண்ணிக்கையே தெரியவில்லை.

**லிபியா.**—டெர்ணு, டிமிமி, மார்போ, ஸிர்டி கூடா தாக்கப்பட்டன. காவல் வேலை மீண்டும் நடந்தது.

புதன்கிழமை டாங்கிப்படைகளை இரண்டு பிரிவாகப்பிரித்துக் கொண்டு முன்னேறுகிறுன், பிர்ஹாகீவிற்கு வட கிழக்கில் சண்டை நடக்கிறது.

**ஆஸ்திரேலியா.**—லே, ரபால் கோபாங், டெலி, டெபாயினி, அம்பாயினு முதலிய இடங்களிலுள்ள எதிரி தளங்கள் தாக்கப்பட்டன.

**பிரிடிஷ் விமானப்படை.**—ஸெயிண்டு நாஸேரைத் தாக்கி, வடபிரான்ஸிலும் படையெடுப்பு செய்யப்பட்டது. சீதோஷ்ண நிலை சாதகமாக இல்லாததால் வேறு தாக்குதல்கள் செய்யப்படவில்லை. இருந்தாலும் வார்னிமண்டி, மான்ஹீம் முதலியன தாக்கப்பட்டன. கொடிய சீதோஷ்ண நிலையால் தான் ஜெர்மனியில் குண்டுகள் போடப்படவில்லை. ஆனால் எதிரி கடல்களில் சுரங்க வெடிகள் போடப்பட்டன.

**பலவகைப்பட்டவை.**—1 கப்பல் தினமான மே மாதம் 22-ம் தேதி ஜனாதிபதி ரூஸ்வெல்டு அதிகமான கப்பல்கள் அமெரிக்காவில் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார். அதைப்போல் எந்த நாடும் கட்டமுடியாது. 500 சதவிகிதம் கப்பல் தொழில் விருத்தியாகி இருக்கிறது.

2. ஜெர்மன் தொழிற்சாலைகளையும், போக்குவரத்துகளையும், அமெரிக்க விமானங்களும், பிரிடிஷ் விமானங்களும் சீக்கிரத்தில் தாக்கும். விமானத்தில் இரண்டாவது போர்முனை ஆரம்பிக்கப்படும். அமெரிக்கப் பகுதிகள் பிரிடிஷாரின் மேல்பார்வையில் தாமகளாகவே ஈடுபடும்.

3. கனடாவிலிருந்த பிரெஞ்சு பிரதிநிதிகளின் பேரில் சந்தேகம் தோன்றியதால் அவ்வாபீஸ்கள் மூடப்பட்டன. ஆனால் அரசியல் சம்பந்தம் ரத்து செய்யப்படவில்லை.

4. **அமெரிக்க டெக்னிகல் கோஷ்டி** இந்தியாவில் ஐந்து வார காலமாக செய்த முயற்சியின் பயனாக 35 தீர்மானங்களைச் சொல்லியுள்ளார். அதில் ஒன்றின்படி யுத்த கால உற்பத்திக்கு ஏற்றவாறு கவர்ன்மெண்டாரின் ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்படும். அமெரிக்காவிலிருந்து அனுப்பும்படி யந்திர சாமான்கள் கேட்கப்பட்டிருக்கிறது. பல இஞ்ஜீனியர்கள் சீக்கிரத்தில் வருவார்கள்.

5. கருங்கடலில் பல்கேரியாவிற்கு அருகில் செபாக் (Chefalk) என்ற துருக்கி ஸ்டீமரை விவரம் தெரியாத ஒரு நீர்மூழ்கி தாக்கியது. ஸ்டீமர் பர்காஸ்ஸிலிருந்து இஸ்தான்புல்லுக்கு வந்து கொண்டிருந்தது. 5 தினங்களுக்குள் இம்மாதிரி இரண்டு தடவை தாக்குதல்கள் நேர்ந்திருக்கின்றன.

6. பாகோ டி ஓரோ என்ற மெக்ஸிகோ எண்ணெய்க் கப்பல் புதன்கிழமை அமுக்கப்பட்டது. ஆகவே அச்சுநாடுகளின் பேரில் மெக்ஸிகோ சண்டை தொடுத்திருக்கிறது.

# சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **18—5—42.** (திங்கட்கிழமை.) | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—விமான எதிர்ப்புகள்.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel), வட பிரான்ஸ் (France). | | | |
| இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி முகாம்கள், மோட்டார் போக்குவரத்து.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | 1 விமானம். | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.— போர் முனை முழுவதிலும். | | 17 விமானங்கள். | 43 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு (Far East)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **19—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | | 3 விமானங்கள். |
| சாயந்திரம்.—ரயில் போக்குவரத்துகள்.—ஸெயிண்ட் ஓமரு(St. Omer)க்கருகாமையில். | | 4 விமானங்கள். | 1 விமானம். |
| இரவில். —பெரிய தொழிற்சாலைகள் உள்பட பல லக்ஷியங்கள்.—மான்ஹீம் (Mannheim). | | | |
| நீர்மூழ்கி கப்பல் தளம்.—ஸெயிண்ட் நாஸேர் (St Nazaire). | | 14 விமானங்கள். | |
| விரோதி விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | | |
| **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| லக்ஷியங்கள்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| **கிரீட் (Crete)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| ராணுவ லக்ஷியங்கள்.—கிரீட் (Crete). | | | |
| **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விரோதி சாமான் கப்பல்களுக்கு துணை புரியப்பட்ட கப்பல்கள். — மத்திய தரைக்கடல் (Mediterranean). | சாதாரணக் கப்பல் தாக்குண்டது; நாசகாரி ஒன்றும் தாக்குண்டது. | | |
| **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.—கிழக்குப் போர்முனை முழுவதிலும். | | 12 விமானங்கள். | 27 விமானங்கள். |

| தேதி. லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|
| **19—5—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| **தூரக்கிழக்கு—டிமோர்** (Timor–Portuguese)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்), | | | |
| துறைமுகம்.—டெலி (Deli). | | | |
| **தூரக்கிழக்கு-டிமோர்** (Timor-Dutch)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.-கொயபாங் (Koepang). | பெருந்தீக்கள் மூட்டப்பட்டன. 2 விமானங்கள்சுடப் பட்டன. | | |
| **தூரக்கிழக்கு பர்மா** (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| விமான நிலயம், துறைமுகம்.—ஆக்யாப் (Akyab). | | நஷ்டமில்லை. | 3 விமானங்கள். |
| **20—5—42.** (புதன்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா** (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | நஷ்டமில்லை. | | |
| **ருஷ்யா** (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனைமுழுவதிலும். | | 23 விமானங்கள். | 65 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு-நியூ கினி** (New Guinea)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—லே (Lae). | | நஷ்டமில்லை. | 6 விமானங்கள். 2 சேதமாயின. |
| **தூரக்கிழக்கு-பர்மா** (Burma)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **விரோதி போக்குவரத்துகள்.**—சிண்ட்வின் (Chindwin) நதியில். | | | |
| **சிறு படதுகள்.**—ஆக்யாப் (Akyab)க் கருகாமையில்). | | | |
| **21—5—42.** (வியாழக்கிழமை). | | | |
| **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| பகலில்.—விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | 6 விமானங்கள். | |
| இரவில்.-தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **லிபியா** (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| **விரோதி முகாம்கள்.**-டிமிமி (Tmimi) பிரதேசத்தில். | | | |
| விமானமிறங்குமிடம் -மார்டுபா (Martuba). | | | |
| துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| **ருஷ்யா** (Russia)—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.**—போர்முனை எங்கும். | | 19 விமானங்கள். | 37 விமானங்கள். |
| **தூரக்கிழக்கு—பர்மா** (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| விமான நிலயம்.—ஆக்யாப் (Akyab). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **22—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி நீர்மூழ்கி தளம்.—ஸெயிண்ட் நாஸேர் (St. Nazaire). | | | |
| | வெடிகண்ணிகள் பாவுவது.—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நிலயங்கள்.—டெர்ணு (Derna), மார்டுபோ (Martuba). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போரரங்கம் முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—அம்பாயினு (Amboina)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கப்பல்கள்.—அம்பாயினு (Amboina)விலுள்ள துறைமுகத்தில். | | | |
| | **நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—லே (Lae). | | நஷ்டமில்லை. | 8 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. 2 சேதமாயின. |
| | **தூரக்கிழக்கு—நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், துறைமுகம், கப்பல்கள்.- ராபால் (Rabaul). | 6 விரோதி பாம்பர் விமானங்களும், 1 கப்பலும் பழுது பட்டுப் போயின. | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—ஆக்யாப் (Akyab). | | | |
| | மாங்-கி-தாங். (Maung'-Gyi-Thaung), ஆக்யாப் (Akyab)க் கருகாமையில். | | | |
| **23—5—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | 2 விமானங்கள். | 1 விமானம். |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள்.—டெர்ணு (Derna). | | | |
| | விமானச் சண்டை.—டிமிமி (Tmimi) பிராந்தியத்தில். | | | 1 விமானம். |
| | விமான நிலயம்.—மார்டுபோ (Martuba). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **23—5—42.** (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(பிரிடிஷ் விமானங்களால்) | | | |
| | விரோதி கப்பல்.—ஸர்டி (Sirte) குடாவில். | தாக்கப்பட்டன. | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள்.**—விமான நிலயங்களிலுள்ள விமானங்கள். | | 11 விமானங்கள். | 24 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு–நியூ பிரிடன் (New Britain)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம்.**—ராபால் (Rabaul). | அநேக விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம், கட்டடங்கள்**—ஆக்யாப் (Akyab). | | | |
| | சைனிய வாசஸ்தலங்கள், கட்டடங்கள்.—கியாக்பையு (Kyaukpyu). | | | |
| | விரோதி சமுத்திரங்களில் செல்லும் வியாபாரக் கப்பல்கள்.—சிண்ட்வின் (Chindwin) நதியில். | | | |
| **24—5—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | சாயந்திரம்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | இரவில்.—வெடி கண்ணிகள்போடுவது—விரோதி சமுத்திரங்களில். | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், தரையிலுள்ள விமானங்கள்.—மார்டுபா (Martuba). | | | |
| | வேவு பார்த்தல்.—ஸிரெனைகா (Cyrenaica). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **விமான நிலயங்கள்.**—டெர்ணு (Derna), டிமிமி (Tmimi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள்**, தரையிலுள்ள விமானங்கள்.—யுத்தப் பிரதேச முழுவதிலும். | | 7 விமானங்கள். | 10 விமானங்கள். |
| **25—5—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | துருப்பு ஏற்றிச் செல்லும் நீராவிக் கப்பல்கள், பெரிய யுத்தப்படகுகள்.—சிண்ட்வின் (Chindwin) நதி. | | | |
| | படகுகள்.—பெரிய நீராவிக் கப்பல்—கலேவா (Kalewa) பிரதேசத்தில். | | | |
| | நதியில் செல்லும் படகு.—மாயூ (Mayu) நதியில். | | நஷ்டமில்லை. | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **19—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ஒரு இடம் இங்கிலாந்தின்.— (England) தென்கிழக்குக் கடற்கரை. | நஷ்டமில்லை ஒருவரும் கொல்லப்படவில்லை. | | |
| | இரவில்.—ஒரு இடம்.—வடகிழக்கு இங்கிலாந்து (England). | சொற்பச் சேதம். | | |
| | மற்றொரு இடம்.—கிழக்கு இங்கிலாந்து (England). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **20—5—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலில்.—கப்பல்கள்.—இங்கிலாந்தி (England)ன் தென்கிழக்குக் கடற்கரை. | சேதமில்லை. | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு–நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்திற்கருகாமையில். | | 4 விமானங்கள். | |
| **21—5—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | இரண்டு பட்டணங்கள்—செகியாங் மாகாணத்தில் (Chekiang). | | | |
| **22—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**23—5—42.** (சனிக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

பகலில்.—மேற்கு, தெற்கு பாகங்கள் இங்கிலாந்தின் (England).

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு—(Far East)**—(ஜப்பானிய விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**24—5—42.** (ஞாயிற்றுக்கிழமை).

| | | | | |
|---|---|---|---|---|
| | இரவில்.—கடற்கரை ஜில்லாக்கள் இங்கிலாந்தி(England)ன் தெற்கு பாகத்தில். | —சொற்பச் சேதம். சிலர் கொல்லப் பட்டனர் | 1 விமானம். | |

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

| | | | | |
|---|---|---|---|---|
| | மால்டா (Malta). | | 1 விமானம். | |

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்).

வேவு பார்த்தல்.-மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்தில்.

**25—5—42.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**-(ஜப்பானிய விமானங்களால்).

மோர்ஸ்பி (Moresby) துறைமுகம்

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(ஜப்பானிய விமானங்களால்).

பல பட்டணங்கள்.—யூனன் (Yunan) மேற்கு பாகத்தில்.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**ருஷ்ய நிலைமை.** பொதுவாகச் சொன்னால் ருஷ்யாவில் தற்சமயம் ஸ்மாலென்ஸ்க், வியாஸ்மா, பிரயான்ஸ்க், ஒரெல், கார்கவ் முதலிய பல இடங்களில் சண்டை நடக்கிறது. இவை யாவும் ரயில்வே ஜங்ஷன்கள் ஜெர்மானியர் வசமிருக்கின்றன. இவ்வளவு இடங்களிலும் ருஷ்யர்கள் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மாரிகாலத்தில் ஜெர்மானியர் இங்கெல்லாம் நிலைத்திருக்கப் பிரயத்தனப்பட்டனர். ஆனால் ருஷ்யர்கள் இவர்களைத் துண்டிக்கப் பிரயத்தனப்பட்டனர். இரு கட்சியினருக்கும் வெற்றி என்றுதான் சொல்லலாம். கார்கவ், பிரயான்ஸ்க், ஸ்மாலென்ஸ்க், லெனின் கிராட்டின் சுற்றுப்புறம் இவை ஜெர்மானியரின் வசத்தில்தானிருக்கின்றன. கலினின், மொஜெயிஸ்க், கலூகா, லோஸோவாயா முதலியவைகளை ருஷ்யர்கள் திரும்பப் பிடித்தனர். ஆகவே இரு கட்சிக்கும் சிரம நிலைகள் இருக்கின்றன. சாதகமாயும் காணப்படுகின்றன.

**கார்கவ்.** இங்கே ருஷ்யர்கள் முன்னேறியது ஒரு சாதாரண சண்டையல்ல. 13 முதல் 37 மைல் நீளம் முன்னேறி 1,000 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள 300 டவுன்களும், கிராமங்களும் விடுவிக்கப்பட்டன. சுமார் 400 ஜெர்மன் டாங்கிகள் அழிக்கப்பட்டன. ஏராளக் கைதிகளும் பிடிபட்டனர்.

வி வி வி வி வி வி வி

**லோஸோராயா சண்டை.** கார்கவ்விற்குத் தெற்கே லோஸோராயா என்ற இடத்தில் ருஷ்யர்கள் முஸ்தீப்பு செய்திருக்கின்றனர். நீப்ரோபெட்ரோவ்ஸ்க் வரையிலும் பரவியிருக்கின்றனர். அதனால் கிரிமியாவிலுள்ள ஜெர்மானியருக்கு ஆபத்து விளைந்திருக்கிறது. ஆனால் கார்கவ்விலிருந்து ஜெர்மானியர்கள் தாக்கப்பார்க்கின்றனர். கார்கவ்விற்கு வடக்கிலிருந்து ருஷ்யர்கள் தாக்கப் பார்க்கின்றனர். அதற்குள்ளாக கெர்ச், கார்கவ் முதலிய இடங்களிலிருந்து ஒரே சமயத்தில் முன்னேறி லோஸோராயா என்ற இடத்திலிருக்கும் ருஷ்யர்களை ஜெர்மானியர் தாக்கப்பார்க்கின்றனர். இதை டிமோஷென்கோ எதிர்பார்த்திருக்கிறார். டிமோஷென்கோ பிரகிருதம் இருக்கும் நிலையில் ஸ்திரமாக இருக்கும்வரை கார்கவ்விலிருந்து ஜெர்மானியரால் முன்னேற முடியாது. அதோடு கிரிமியா, அஸாவ் கடற்கரை முதலிய இடங்களிலும் சமாளிக்க முடியாது.

இதைத் தவிர ருஷ்யாவில் ஹிட்லருக்கு வேறு தொந்தரவுகளுமிருக்கின்றன. லெனின்கிராட் இன்னும் எதிர்த்து நிற்கிறது. அதோடு பால்டிக்கிலுள்ள ஜெர்மானியருக்கு ருஷ்யக் கடற்படையால் பயமேற்படக்கூடியதாகவே இருக்கிறது. பிரிடிஷ், அமெரிக்க ஸப்ளைகளைத் தடுக்க மர்மான்ஸ்கில் முஸ்தீப்பு செய்யவேண்டியதாயும் இருக்கிறது. கோடைகாலம் வருவதால் நேசநாடுகள் ஆர்கேஞ்சலை உபயோகித்துக்கொள்ளலாம்.

வி வி வி வி வி வி வி

**சைனு யுத்தம்** தற்போது சைனுவில் செய்யப்படும் ஜப்பானியத்தாக்குதலுக்குக் குறிப்பான லக்ஷியங்கள் காணப்படவில்லை. சுங்கிங்கிலிருந்து மே 23-ல் வெளிவந்த நாஷனல் ஹெரால்டு பத்திரிகையில் ஜப்பானியத் தாக்குதல் உள்நாட்டை நோக்கியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸின்மின் பாவோ என்ற பத்திரிகையில், சைனுவைத் தோற்கடிப்பதும், பிறகு ருஷ்யாவைத் தாக்குவதும், சீன தளங்களை நேசநாடுகள் உபயோகிக்காமல் செய்வதும்தான் ஜப்பானியருக்கு நோக்கமென்று அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க வாலண்டியர் கூட்டத்திற்குத் தலைவனை கிளாரி செனுவால்டு சொல்லும்போது, அமெரிக்கா 2,000 விமானங்களை அனுப்பினல் ஜப்பானிய விமானப்படையே அழிந்துவிடுமென்று சொல்லியிருக்கிறார். ஏராளமாக யுத்த சாமான்கள் உற்பத்தி செய்யப்படும் இந்த சமயத்தில் அவர் சொன்னது ஒரு அசாத்தியமான காரியமல்ல. இன்னும் சில மாதங்களில் ஜப்பான் பேரிலேயே விமானத் தாக்குதல் நேரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. சகியாங்கிலேயோ, வேறு எங்கேயோ எல்லா சீன தளங்களையும் பிடிப்பது ஜப்பானியரால் முடியாது.

பர்மா ரஸ்தா உபயோகமில்லாதபோனலும் உர்கா, ஸாமர்கண்டு, டாஸ்கண்டு வழியாக சைனு ஸப்ளைகளைப் பெறமுடியுமென்று வில்லியம் ஸிம்ஸ் என்பவர் தெரியப்படுத்தியிருக்கிறார். கழுதைகள், யானைகள் பேரில் சாமான்கள் வந்து சேரும். சொந்த பீரங்கிகளையும் கத்திகளையும் சீனர்களே செய்து கொள்ளுகின்றனர்.

சைனுவில் சண்டை இருபாகங்களில் நடக்கிறது. ஒன்று பர்மா ரஸ்தாவிலும் மற்ருென்று சகியாங் மாகாணத்திலும். பர்மா ரஸ்தாவில் கெங்கு, கென்டங் என்ற இடங்களிலிருந்தும் தாக்குதல்கள் நேருகின்றன. சுங்கிங்கிற்கு அருகில் பர்மா ரஸ்தாவின் குறுக்கே, ஸால்வீன், மெகாங் நதிகளிலிருந்து பல வாய்க்கால்கள் போகின்றன. யூனன் மாகாணத்திலிருக்கும் மலைச்சாரல்களும் குறுக்கிடுகின்றன.

சகியாங் மாகாணத்தில் நான்சாங்கிலிருந்து தலைநகரை நோக்கி எதிரி முன்னேறுகிறான். பின் நதிக்கரையில் யூச்சௌவ்வில் துருப்புகளையும் இறக்கியிருக்கிறான். இவ்விதம் இருந்தாலும் எதிரியின் முன்னேற்றம் பின்ஸர் படையெடுப்பைப் போல் இருக்கமுடியாது. ஏனென்றால் சகியாங்கிலிருந்து சுங்கிங்கை நோக்கி முன்னேறினால் யாங்ஸி நதியின் வழியாக யந்திரப்படைகள் செல்லமுடியாது.

வி வி வி வி வி வி வி

**அச்சுநாட்டுப் பொய் பிரசாரம்.** ஒரு பக்கம் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதலும், மற்றொரு பக்கம் டிமோஷென்கோ எதிர்ப்பும் ஏற்பட்டவுடன் ஜெர்மன் பிரசாரம் தாறுமாறாக ஏற்பட்டிருக்கிறது.

கெர்ச் சண்டையைப்பற்றி தினம் செய்யப்படும் ரேடியோ ஒலிபரப்பு விநோதமாகவே இருக்கிறது. மேமீ 13உ ருஷ்யப்படைகள் அழிக்கப்பட்டன; 40,000 கைதிகள் பிடிபட்டனர்; மேமீ 14உ விடாமல் ருஷ்யர்கள் துரத்தப்படுகின்றன; மேமீ 15உ கெர்ச்சின் வாசலில் ஜெர்மானியர் புகுந்தனர்; மேமீ 16உ நகரமே துளைக்கப்பட்டது; மேமீ 17உ நகரின் கிழக்கில் சண்டை நடக்கிறது; மேமீ 18உ சீக்கிரத்திலேயே ருஷ்யர்கள் அழிக்கப்படுவார்கள்; மேமீ 19உ அழிக்கவும் பட்டார்கள்; மேமீ 20உ 1,49,000 கைதிகள் பிடிபட்டனர்; மேமீ 20உ சண்டை இன்னும் நடக்கிறது.

இதில் கைதிகளைப்பிடித்ததாகச் சொல்லும் எண்ணிக்கையில்தான் அதிகப் பொய் காணப்படுகிறது. மேமீ 13உ 40,000 கைதிகளைப் பிடித்தனராம். மேமீ 20உ 1,49,000 பேர்களைப்பிடித்தனராம். ஆனால் 1,00,000 பேர் கைதியாகியும் கொல்லப்பட்டும் இருக்கலாம். அவர்கள் சொல்லும் கணக்கைப் பார்த்தால் $2\frac{1}{2}$ லக்ஷம் பேர்கள் கெர்ச் யுத்தரங்கத்தில் இருந்திருக்கவேண்டும். 20-மைல் அகலமும் 50 மைல் நீளமுள்ள இந்த இடத்தில் இவ்வளவுபேர் இருக்கமுடியாது. ஆனால் இதைப்போல் எவ்வளவோ பொய்களைச் சொல்லியிருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**அமெரிக்கக் கப்பல்கள்.** அமெரிக்காவில் கப்பல்கள் குறைந்துவிட்டதாக அச்சு நாடுகள் சொல்லுகின்றன. ஆனால் வாஷிங்டனில் கொடுக்கப்பட்ட அரசாங்கத்தாரின் கணக்கைப் பார்த்தால் அமெரிக்கா சண்டையில் இறங்கியது முதல் ஐந்து மாத காலத்தில் 92 வியாபாரக்கப்பல்கள் சேதமாயின. ஆனால் அதே காலத்தில் புதிதாக 120 கப்பல்கள் கட்டப்பட்டன. நஷ்டத்தை ஈடுசெய்ததோடு அதிகமாகவே மாதம் ஒன்றுக்கு ஆறு கப்பல்கள் வீதம் கட்டப்படுகிறது. மேலும் அமெரிக்க யுத்த சாமான்களின் உற்பத்தியும் அதிகமாகவே விருத்தியாகிக்கொண்டு போகின்றன.

வி வி வி வி வி வி வி

**கர்னல் ஜான்ஸன் அமெரிக்கா திரும்பினார்.** இதை ஆதாரமாகக்கொண்டு பாங்காக் ரேடியோவில் அபாண்ட பிரசாரம் செய்யப்பட்டது. இந்தியாவில் ஜனாதிபதி ரூஸ்வெல்டின் முயற்சி பலிக்காததால் இவர் அமெரிக்கா திரும்பியதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அன்னார் இந்தியாவைவிட்டுச் செல்லும்போது சொன்னதை அச்சு நாடுகள் மறந்து விட்டன:—'சீக்கிரத்திலேயே இந்தியாவிற்கு வந்து மறுபடி காரியங்களைத் துவக்கி எதிரியை எதிர்க்கும் திட்டத்தை சாதிக்கலாமென்றே நினைக்கிறேன்.'

வி வி வி வி வி வி வி

**ஆஸ்திரேலியாவில் கலவரம்.** ஆஸ்திரேலியாவில் மனஸ்தாபத்தோடு மட்டுமல்லாது கலவரமே ஏற்பட்டிருப்பதாக அச்சுநாடுகளின் பிரசாரம் நடந்து வருகிறது. இந்தப் பிரசாரத்திற்கு டாக்டர் எவாட் சரியான பதில் சொல்லியிருக்கிறார். பிரிடன்பேரில் லுப்ட்வாபி படை வந்து தோற்று ஓடியபோது இங்கிலாந்திலுள்ளோர் இருந்த விதமாகவே தற்சமயத்தில் ஆஸ்திரேலியர் இருப்பதாகச் சொன்னார்.

**உள்நாட்டு நிலைகள்.** சண்டை செய்யும் நாடுகளின் உள்நாட்டு நிலையைப்பற்றி இவ்வாரத்தில் அதிகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன :—

**பிரிடன்.** 14 முதல் 65 வயது வரையில் 2,20,00,000 பேர்கள் சேர்ந்து யந்திரப்படைகளிலும் பொதுஜனப் பாதுகாப்புவேலையிலும், தொழிற்சாலைகளிலும் பிரிடனில் ஈடுபட்டிருப்பதாக மிஸ்ட்டர் எர்னஸ்டு பெவின் அறிவித்தார். இவ்வளவு பேர்களை எந்த நாடும் சேகரித்ததில்லை. அவ்வப்போது சேர்க்கப்படும் எண்ணிக்கையும், விவாகமான ஸ்திரீகள் சில சந்தர்ப்பங்களில் ஈடுபடுவதும், 14 வயதிற்கு மேற்பட்ட மாணுக்கர்களும், சம்பளமில்லாமல் சேவை செய்கிறவர்களின் எண்ணிக்கையும் இதில் சேர்க்கப்படவில்லை. முன்பு தற்காப்பு மந்திரியாக இருந்த சார்லஸ் பால்மர் இங்கிலாந்தில் சிறிது காலம் இருந்துவிட்டு அமெரிக்கா திரும்பி தனது வேலையைப் பற்றி பின்வருமாறு சொன்னுர் :—'பிரிடனிலுள்ள ஒவ்வொரு தொழிற்சாலையும், ஈடுபட்டு, கிடைக்கும் பொருளையெல்லாம் செலவழித்து ஸ்திரீ, புருஷர்கள் யாவரும் ஈடுபட்டு பிரிடன் பிரமாதமாக யுத்தம் செய்கிறது. இவ்விதம் செய்தால்தான் வெற்றிகிட்டும். பிரிடன் ஏதோ தயக்கமாக இருப்பதாகச் சொன்னுல் பிரிடனின் உள்நிலைமை தெரியாதவர்களாவார்கள்.'

**ஜெர்மனி.** மே௴ 20௳ கோயரிங் ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள சிரமங்களைப்பற்றிச் சொன்னுன். 'மாரிகாலச் சண்டை அதிக சிரமமாகிவிட்டது. பஞ்ச பூதங்களும் நமக்கு விரோதமாக இருக்கின்றன. சென்ற வருஷம் அருவடையும் குறைவு. இப்போ மழைகள் தேவையாக இருக்கிறது.'

**இதாலி.** இதாலியிலும் நிலைமை மோசமாக இருக்கிறது. ஸப்ளைகள் குறைவாக இருப்பதால் ஜனங்களுக்கு யுத்த உணர்ச்சியும் குறைந்துவிட்டது. உணவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும், பாஸிஸ்டு கட்சியைப் பலப்படுத்தவும். எதிரி ஒலிபரப்புகளைக் கேட்கக்கூடாதென்றும் அவசரச் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன. யுத்தம் மற்ற நாடுகளுக்குப் பரவியதால் இதாலிக்கு முக்கியத்துவம் குறைந்து வருகிறது. இதாலி யுத்தத்தில் ஈடுபட்டதால் ஜெர்மனிக்கு உள்ளாகிவிட்டது. ஜெர்மனியின் தோல்வி இப்போது காணப்படுகிறது. ஜெர்மனி ஜயிப்பதாகவே வைத்துக்கொண்டாலும் இதாலிக்கு ஒரு சாதகமுமில்லை. 'இங்கிலாந்து ஜயித்தால் நமக்கு நஷ்டம் ஏற்படுமென்றும், ஜெர்மனி ஜயித்தால் அடியோடு அழிந்து விடுவோமென்றும்' இதாலியில் சொல்லிக்கொள்ளுகிருர்களாம்.

வி வி வி வி வி வி வி

**பிரான்ஸ்-இதாலி சம்பந்தம்.** ஒரு நாளும் கெட்டதில்லை. 1860-ல் மூன்ருவது நெபோலியன் என்ற அரசன் ஸவாய், நைஸ் என்ற நகரங்களை பிரான்ஸுடன் சேர்த்துக்கொண்டான். 1881-ல் பிஸ்மார்க் என்பவன் வட ஆபிரிக்காவிலுள்ள டூனிஸ்ஸை பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்தான். அபிஸீனிய யுத்தத்தின் போது சர்வ தேசச் சங்கம் இதாலி மேல் போட்ட நிர்ப்பந்தங்களை லவால் லெகு வாக்கினுன். ஆனல் பூர்ண உதவியையும் அளிக்கவில்லை. தன்னை லவால் ஏமாற்றியதாகவே முஸோலினி நினைத்துவருகிருன்.

தற்சமயம் லவால் அதிகாரத்திற்கு வந்ததும், அவன்மேலுள்ள துவேஷத்தை முஸோலினி விருத்தி செய்துகொண்டான். ஹிட்லருக்குத் தன்னைவிட லவால் அதிக நண்பனுகிவிட்டதால் கார்ஸிகா, ஸவாய், இரண்டையும் இதாலி திரும்ப அடைய முடியாதென்றும் நினைக்கிருன். இதாலியால் அச்சுநாடுகளுக்கு சிரமம்தான். ஆகவே ஹிட்லர் தன்னை விட்டுவிட்டு பிரான்ஸுடன் சேர்ந்து விடுவானே என்று முஸோலினி பயப்படுகிருன்.

கொடுங்கோல் மன்னர்களுக்கே எப்பவும் ஆபத்துத்தான். தன் நிலைமையைச் சாதித்துக்கொள்ள வேண்டுமானல் கார்ஸிகா, டுனிஸ் முதலிய நகரங்களாவது திரும்ப அடையப்படுமென்று முஸோலினி எடுத்துச் சொல்லவேண்டும். இந்த பயத்தினுல்தான் சமீபத்தில் ஹிட்லரை சந்தித்துப்பேசினுன். சமீபத்தில் கிடைத்த செய்தியின்படி பிரெஞ்சு எல்லையிலுள்ள பீட்மாண்டு நகரிலுள்ள ஆல்பைன் துருப்புகளை விக்டர் எமானுவல் அரசன் சரிபார்த்திருக்கிருன். கார்ஸிகா டுனிஸ்ஸிலுள்ள படைகளை வாபஸ் செய்து அவைகளை இதாலிக்குக் கொடுத்து விடும்படி விஷிக்கு முஸோலினி செய்தி அனுப்பி இருக்கிருர்.

ஆனுல், ஹிட்லர் வெகு சாமர்த்தியமாக நடந்துகொள்ளுகிருன். கார்ஸிகாவையோ, டுனிஸ்ஸையோ இதாலிக்குக் கொடுப்பதில் அவனுக்கு அதிக அக்கரை இல்லை. ஆனுல் அவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு லவாலிடம் காரியங்களைச் சாதித்துக்கொள்ளுகிருன். ஆனுல் பிரெஞ்சு மக்களுக்கு இது விஷயங்களில் திருப்தி இல்லை. பிடேனும் ஜெர்மனி வசமாகிவிட்டான்.

ஆகவே ஜெர்மானியருடன் உறவு கொண்டாடும்போது வெகு ஜாக்ரதையாகவே லவால் நடந்துகொள்ளுகிருன். ஜனங்களைத் தனது வசமாக்கிக்கொள்ளப் பார்க்கிருன். எப்படியாஞலும் பிரெஞ்சு ஸ்வதந்திரம் அழிந்து, விஷி ஜெர்மனிக்கு உட்பட்டதாக ஆகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**இந்தியாவும் கொரில்லா யுத்தமும்.** லண்டன் நியூஸ் கிராணிகள் பத்திரிகையைச் சார்ந்த மிஸ்ட்டர் பிலிப் ஜார்டன் டெல்ஹியிலிருந்து சமீபத்தில் ஒலிபரப்பும்போது கொரில்லா சண்டைக்கு இந்தியா வசதியான இடமென்றும், அந்தச் சண்டையில் பழக்கம்பெற்ருல் இந்தியர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் என்றும் சொன்னுர். இவ்விதச் சண்டையைச் செய்தால் ஜப்பானியர் தோற்றுவிடுவார்கள். மேலும் அவர் சொன்னதாவது:—"கொரில்லா சண்டையைப்பற்றி நீங்களாகத்தான் கற்றுக்கொள்ளவேண்டும். கேவலம் சைனியத்தில் ஈடுபட்டவர்கள் மாத்திரம் செய்யக்கூடியதல்ல. கொரில்லா சண்டையைப் பார்த்தாலே அது பொதுஜனங்களின் சண்டையென்றும் இதற்காக இந்தியர்களாக முன்வந்து பாதுகாப்பு வேலைகளைச் செய்யலாமென்றும் தெரியவரும்."

உணர்ச்சி வாய்ந்த இந்தியர்களாலேயே தயாரிக்கப்பட்ட கொரில்லா சைனியம் சம்பளம் வாங்கிக்கொண்டு ஈடுபடும் படைகளைக் காட்டிலும் அதிக அக்கரையுடன் ஈடுபடும்.

வி வி வி வி வி வி வி

**ஆயுத ஸப்ளை.** யுத்தத்திற்கு ஆயுதங்கள் தேவையான போதிலும் பயிற்சி காலத்தில் தேவையில்லை. பயிற்சி காலங்களில் தேவையானதெல்லாம் எதிரியை எதிர்க்கக் கூடிய மனப்பான்மையும் ஒற்றுமைப் படவேண்டுமென்ற சிந்தனையும் தான் வேண்டும். தனித்தனியாக சிறு குச்சிகள் கிடந்தால் அவைகளைச் சுலபமாகவே ஒடித்து விடலாம். எல்லாக் குச்சிகளையும் சேர்த்துக் கட்டினுல் மிகுந்த பலசாலியாலும் ஒடிக்க முடியாது. ஆகவே ஒற்றுமை தான் நமக்கு பலமளிக்கும்.

மேலும் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு மாத்திரம் எதிரியைத் தடுத்துவிட முடியாது. ருஷ்யாவில் கத்திகளைக்கொண்டும் விவசாயக்கருவிகளை உபயோகித்தும் எதிரிகளுக்கு அதிகச் சேதம் உண்டாக்கப்பட்டது.

சைனியங்களை முன்னேறும்படி செய்ய ஜனங்கள் தான் முன்வரவேண்டும். அதற்காகக் கொரில்லா படையில் சேரவேண்டிய நிர்ப்பந்தமில்லை. அவ்வித பழக்கமும் இவர்களுக்குக் கிடையாது. தரைப்படைக்கும் விமானப் படைக்கும் அதிக உதவியாக இருக்கும். இப்படையைக்கொண்டே சில சண்டைகளை ஜயித்து விடலாம்.

**மனிதனின் சொந்த வீடு.** "தனக்குச் சொந்தமான இடத்தை ஸ்வாந்தார் காப்பாற்றிக் கொள்ளுவதை யாரும் தடுக்க முடியாது. எதிரிக்கு எவ்வித சிந்தனையிருந்தாலும் பிறர் நாட்டில் பிரவேசிக்க நினைத்தால் அதை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளத்தான் செய்வான். எதிரி தனது பிரதேசத்தைப் பிடித்துக் கொள்ளட்டுமென்ற அஜாத சத்துருக்கள் இவ்வுலகில் கிடையாது. ஆகவே கொரில்லா தந்திரங்களைக் கற்றுக்கொண்டு எதிரியைத் துரத்தியடித்து தங்களைக் காப்பாற்ற வந்திருக்கும் சைனியத்திற்கு உதவியளிப்பது எவ்வளவு நலமென்று யோசியுங்கள்.

இவ்விஷயத்தில் நாம் ருஷ்யர்களைப் பார்த்து கற்றுக்கொள்ளலாம். அவர்களும் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்றுத்தான் வருகின்றன".

---

# "லவால்".

## பிரான்ஸ் தேசத்தின் துரோகி.

(பி. பி. ஸி. யின் ஒலிபரப்பு).

### லவால்—தேசத் துரோகி.

சென்ற வாரத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட முக்கிய அரசியல் மாறுதலில் பிரெஞ்சு அரசாங்கத்தில் லவால் மறுபடியும் தோன்றியிருக்கிறான், மார்ஷல் பிடேன் இன்னும் பிரெஞ்சு தேசத்திற்குத் தலைவராகவே இருக்கிறார்.

ஆனாலும் பியரி (Pierre) லவால் அரசாங்கத்திற்குத் தலைவனாக வந்திருக்கிறான். அவன் மந்திரி சபையில் முக்கியமான நாலு உத்தியோகங்களைப் பார்த்து வருகிறான். படைகளுக்கு பொறுப்புள்ளவனாக இருக்கும் அட்மிரல் டார்லான், மார்ஷல் பிடேனுக்குத்தான் கட்டுப்பட்டவன். லவால் எப்படி யாருக்குக் கட்டுப்பட்டவன் என்று இப்பொழுது சொல்ல முடியவில்லை. பிடேனும், டார்லானும் வெறுத்து வந்ததாகத் தெரியவந்த லவால், திடீரென்று அதிகாரப் பதவிக்கு வந்ததில் என்ன மர்மம் இருக்கிறதோ தெரியவில்லை.

### குதிரை இல்லாமல் வெறும் சேணம் மட்டில்.

சென்ற வாரத்தில் பிரான்ஸில் ஏற்பட்ட மாறுதல்கள் பிரான்ஸுக்கு மட்டில் அல்ல. இவ்வுலகத்திற்கே முக்கியத்வத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றன. ஆகையினால் அவற்றை அதிகக் கூர்மையாக கவனித்து பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. பிடேனைப் புறக்கணித்து விட்டதில் அவன் பொம்மை மாதிரியாகிவிட்டான். டார்லானுக்கிருந்த அரசியல் அதிகாரமும் பிடுங்கப்பட்டுவிட்டது. லவால் தன் இச்சைப்படி நடப்பதற்கு ஸ்திரப்படுத்திக் கொண்டுவிட்டான். அவனிருப்பிடம் நிலையாக இருந்த போதிலும் அரசாங்கத்தை அவனிஷ்டப்படி நடத்துவதற்கு முடியாமல் இருக்கிறது. ஏனென்றால் அதிகார மட்டிலிருப்பது பிரயோஜனமில்லை. அரசியல் பூராவும் ஜெர்மனியின் ஆதிக்கத்திலிருக்கிறது. பிரெஞ்சு அரசாங்கத்தை நடத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கிறதென்பது லவாலுக்கும் ஜெர்மானியருக்கும் நன்றாகத் தெரியும். லவாலுக்கு ஏற்படக்கூடிய க்ஷேம லாபங்களைக் குறித்து பின்னால் சொல்லப்படும்.

### பிடேன் டார்லான் அரசாக்ஷி.

லவாலுக்கு அதிகாரம் கிடைத்தற்குள்ள சந்தர்ப்பங்களைக் குறித்து சில வார்த்தைகள் இங்கு சொல்லுவோம். சில காலமாக பிடேன்—டார்லான் அரசாக்ஷி

யில் ஹிட்லர் மிகவும் அதிருப்தி கொண்டிருந்தான் என்பதில் சந்தேகமில்லை. நமக்கும் அது அதிருப்தியாகத்தான் இருந்துவந்தது. ஜெர்மானியரின் ஆதிக்கத்தின் கீழிருந்தும் 'கூட விஷி அரசாங்கம் சாமர்த்தியமாக ஜெர்மானியரின் திருப்திக்காகவாவது, லாபத்துக்காகவாவது நடந்து கொள்ளவில்லை. ஆகையினுல் ஹிட்லர் அதிருப்தி அடைந்தான். சமீபத்தில் யுத்த நெருக்கடியான கட்டத்திற்கு வந்துவிடுமென்று உத்தேசித்து மேற்குப்பக்கத்தைப் பாதுகாப்பதற்காக ஹிட்லர் தீர்மானித்தான். அது முதற்கொண்டு என்ன நடக்கும் என்பது யாவருக்கும் தெரிந்ததே. 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரெஞ்சுக் கப்பற்படையும் அப்பொழுது பிரெஞ்சு சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஏராளமான படைகளும் உதவிக்கு இருந்தபொழுதே, ஜெர்மன் ஆக்கிரமிப்பை எதிர்த்துச் சமாளித்து நிற்காமல் போர்டியோ (Bordeaux) வில் சரணடைந்த அந்த விஷி அரசாங்கத்தார் இப்பொழுதும் ஜெர்மானியரின் இஷ்டப்படி நடப்பார்கள் என்பது நிச்சயம். ஆனுல் வயது முதிர்ந்த பிடேன், தேசத் துரோகி என்று தெரிந்து அவன் லவால் பேரில் அருவெருப்பு கொண்டிருந்தபோதிலும், இவ்வளவு தூரம் லவாலுக்கு அதிகாரம் கொடுத்ததுதான் அவன் சரணமடைந்ததை நன்ருகக் காண்பிக்கிறது. 1940-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் மிகவும் இழிவாகப் பேசி தள்ளி விடப்பட்ட லவாலிடமே இப்பொழுது அதிகாரத்தை விட்டுக்கொடுத்ததற்கு என்ன காரணமென்று சில நாட்களுக்குமுன் பிடேன் பிரெஞ்சுப் பொதுமக்களுக்குச் செய்த பிரசங்கத்தில் குறிப்பிடவில்லை.

### ஜெர்மானியரின் வஞ்சக சூழ்ச்சி.

அவ்விதம் குறிப்பிடாததற்கு உண்மையான காரணம் ஜெர்மானியரின் சூழ்ச்சிதான். அதைத் துணிகரமாக சொல்வதற்கு பிடேனுக்கு தைரியமில்லை. லவாலை ஆதரிக்கும்படிக்கும் பிரெஞ்சு மக்களைக் கேட்டுக்கொண்டான். அப்படி கேட்டுக்கொள்ளும்பொழுது பிரெஞ்சு மக்களை பொருமையாகவும், தைரியத்துடனும் இருக்கும்படிக்கும், புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளும்படிக்கும் வேண்டிக்கொண்டான். நானும் எதிர்பார்ப்பது என்னவென்ருல் பிரெஞ்சு மக்களில் பெரும்பான்மையோர் பொருமை, சாமர்த்தியம், தைரியம் இந்த குணங்களுடன் நடந்துவந்தால், லவாலின் அழிவு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும். அத்துடன் ஜெர்மானியரின் எண்ணங்களும் அடியோடு பாழாய் போய்விடும்.

### டார்லான்.

இந்த சந்தர்ப்பத்தில் டார்லானைக் குறித்து சில வார்த்தைகள்தான் சொல்லலாம். ஜெர்மானியரைத் திருப்தி செய்யமுடியாததால் டார்லானுக்கு இந்த கதி நேரிட்டிருக்கிறது. படைப்பலத்திற்கு அவனைத்தலைவனுகச் செய்திருப்பது உண்மை. அவனை முற்றிலும் குறைவாகப் பேசுவது கூடாது. அவன் லவாலை வெறுக்கிருன். இப்பொழுது லவாலுக்கு அதிகாரம் ஏற்பட்டதில் இன்னும் வெறுப்பு அதிகமாய்விட்டது. மேலும் டார்லான் அதிகார ஆசை பிடித்தவன். அவனுக்கு அதிகாரம் கிடைத்து ருசி ஏற்பட்டதில், இன்னும் அதிகம் கிடைக்கும்வரை அவன் சந்தோஷமாக இருக்கமாட்டான். இப்பொழுது லவால் எல்லா அதிகாரத்தையும் பெற்றிருக்கிருன். இது டார்லானுக்கும் தெரியும்.

### பிரெஞ்சு குடியேற்ற நாடுகள்.

பிரெஞ்சுப் படைகளுக்கு தற்சமயம் டார்லான் விடுத்த உத்தரவில் ஒரு பாகம் குறிப்பிடத்தக்கது. அதாவது பிரெஞ்சு சாம்ராஜ்யத்தின் தற்காப்பைப்பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் சொல்லியிருப்பதிலிருந்து இப்பொழுது மிஞ்சியிருக்கும் குடியேற்ற நாடுகளை பிறர் வசம் விட்டுவிடாமல் பிரெஞ்சுக்காரர் வசம் இருக்கும்படி செய்யவேண்டியதைக் குறித்து சொல்லியிருக்கலாம். ஆனுல் நேசதேசத்தார்கள் கைப்பற்றியிருக்கும் பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளைத் தாக்குவதற்கு திட்டம் போட்டிருப்பதாகவும் கருதலாம். இது விஷயத்தைப் பொறுத்தும் பின்னுல் சொல்லப்படும்.

### பிரிடன் பேரில் லவாலின் குற்றச்சாட்டு.

லவால் செய்த ஒலிபரப்பில் ஒவ்வொரு வார்த்தையும் இழிவான தன்மையைக் காட்டுகிறது; கண்டனம் செய்யவேண்டியதாகவும் இருக்கிறது. கிரேட் பிரிடனை அவன் கேவலமாக தூஷித்திருப்பதற்கு சவால் கொடுத்ததாக வைத்துக் கொள்ளலாம். பிரான்ஸுக்கு உதவி தேவையாயிருந்த சமயத்தில் நாம் கைவிட்டுவிட்டதாகவும், இப்பொழுது தற்காப்பு செய்துகொள்ளமுடியாமல் இருக்கும்பொழுது பிரிடன் பிரான்ஸைத் தாக்குவதைக் குறித்தும் அவன் பலவாராக தூஷித்திருக்கிருன். நமது கொள்கையிலும் நாம் செய்யும் தீர்மானத்திலும் அநேக தவறுதல்கள் ஏற்பட்டதாக நாமே ஒப்புக்கொள்ளத் தயாராகயிருக்கிறோம். அதன் காரணமாக நமக்கு நேர்ந்திருக்கும் கஷ்டங்களையும் இப்பொழுது அடைந்துவரும் கஷ்டங்களையும் கடவுள்தான் அறிவார். ஆனல் யுத்தத்திற்குப் போகும்படி பிரான்ஸை நாம் நிர்ப்பந்தித்ததாகவும், பிறகு கைவிட்டதாகவும் சொல்வது அபாண்டமான பொய். பிரான்ஸ் ஒரு ஜனநாயக நாடு. அவ்வரசாங்கத்தின் பூரண அனுமதியின் பேரில்தான் பிரான்ஸ் யுத்தத்தில் இறங்கியது. அப்படி போர் துடங்கியவுடன் எத்தகைய ராணுவ உதவி கிரேட் பிரிடனல் கொடுக்கக்கூடும் என்பதும் பிரான்ஸுக்கு நன்ருகத் தெரியும். நாம் வாக்குறுதி செய்ததற்குமேல் பிரான்ஸுக்கு உதவியாகப் படைவீரர்களும், யுத்தப் பொருள்களும் அனுப்பினேம் என்பது பின்னல் சரித்திர பூர்வமாக நமக்குத் தெரியவரும். மேலும் நாம் கடைசிவரையில் பிரெஞ்சு மக்களிடம் பிரியத்துடன் நடந்துகொண்டோம் என்று இப்பொழுது சிறைச்சாலையிலிருக்கும் மாஜி பிரதம மந்திரி M. பால் ரெயினுஸ்டை கேட்டாலே தெரியும். அவர் அதைப்பற்றி கூறியுமிருக்கிருர். பிரான்ஸுக்கு ஏற்பட்டிருந்த அபாயமான நிலைமையில் நம் வசமிருந்த ஆதாரங்களை எல்லாம் உபயோகித்து நாம் உதவி செய்வதற்குத் தயாராயிருந்தோம் என்பதை அவர் சிறைச்சாலையிலிருந்துகொண்டே மிகவும் தைரியமாகப் பாராட்டிக் கடிதம் எழுதியிருக்கிருர். அக்கடிதம் திருட்டுத்தனமாக வெளிவந்து நமக்கு எட்டியிருக்கிறது.

### லவாலின் கொள்கை.

லவால் என்ன செய்யப்போகிருன் என்பதை அவன் விஸ்தரிக்காமல் ஜாக்ரதையாக மறைத்து வைத்தபோதிலும் அவன் சொல்லும் வார்த்தைகளிலிருந்தே அவன் திட்டங்களைக் கண்டுகொள்ளலாம். சரியான முறையிலோ அல்லது தப்பான முறையிலோ அச்சு நாடுகளுக்கு ஏராளமாகவும், பூரணமாகவும் உதவியளிப்பதற்கு தன் நாட்டை ஈடுபடச்செய்ய அவன் உத்தேசிக்கிருன். அது மிகவும் கடினமான விஷயம். அப்படிச் செய்வது கடினம் என்பது அவனுக்கும் தெரியும். ஆனல் இனி எப்படி கடினமாக இருக்கப்போகிறது என்பது அவனுக்கே தெரியாதென்று நான் நினைக்கிறேன். ஆனல் ஜயிக்கப்பட்ட தன் ஜனங்களுக்கு வரக்கூடிய லாபத்தைப்பற்றி குறிப்பிட்டும், பயமுறுத்தியும் அவன் பேசியதிலிருந்து அவன் செய்யவேண்டிய வேலை கடினமாக இருக்கிறதென்று தெரியவரும். அவன் ஹிட்லரை பெருந்தன்மை வாய்ந்தவனென்றும், அவனிடம் நம்பிக்கை வைத்தாலும், பிரெஞ்சு மக்கள் அவன் எண்ணத்தை அறிந்து அதன்படி நடந்துகொண்டாலும், புதிய உலக ஏற்பாட்டில் பிரான்ஸுக்கு உன்னத ஸ்தானம் கொடுப்பானென்றும் சொன்னுன். மேலும் அம்மாதிரி ஒத்துமையாக குற்றமற்ற பிரெஞ்சுப் பிணையாளிகள் நூற்றுக்கணக்கிலும், ஆயிரக்கணக்கிலும் ஜெர்மானியரால் சுடப்படுவதையும் குறித்துச் சொன்னுன். ஏராளமாக விளைவுள்ள அந்தப் பிரெஞ்சு நாட்டிலிருந்து சூறைபோவதினல் உணவுப் பொருள்கள் குறைந்து, ஸ்திரீகளும், குழந்தைகளும் நாளுக்குநாள் பலஹீனமாகப்போய் விடுவதையும் பற்றி குறிப்பிட்டான்.

### பொதுவுடமைக் கொள்கையைக் காட்டி பயமுறுத்தல்.

ருஷ்யர்களும், நேசதேசத்தார்களும் ஜயம் பெற்ருல் என்ன சம்பவிக்கும் என்று பொதுவுடமைக் கொள்கையை எடுத்து காட்டி தான் சொல்வதைக் கேட்பவர்களுக்கு பயமுண்டாகும்படி எடுத்துச் சொன்னுன். அவனுடைய வாதத்தின் சாமர்த்தியத்தை என்னவென்றுதான் சொல்லுவது! "ஜெர்மன்

அதிகாரத்திற்குக் கீழ்படியுங்கள். அப்படி யில்லாமல்போனால் நீங்கள் பொது வுடமைக் கக்ஷியின் ஆதிக்கத்தின் கீழ் வருவதற்கு நேரிடும்." என்று லவால் சொல்லி பயமுறுத்துகிறான். ஸ்வதந்திரமுள்ள எந்த பிரெஞ்சுக்காரனும் இதற்கு "வந்தனம். இப்பொழுது உண்மையில் அனுபவித்துவரும் தொல்லையை நீக்கி வரப்போகும் கெடுதல் என்ற தோற்றத்தை அனுபவிக்க நான் சம்மதிக்கிறேன்", என்றுதான் சொல்வான். அதனால் ஹிட்லருடன் ஒத்துழைப்பதற்கு லவால் கட்டுப்பட்டிருக்கிறான் என்று வெளிப்படையாகத் தெரிகிறது.

## லவாலின் சூழ்ச்சி பலிக்காது.

லவால், ஹிட்லர் இஷ்டப்படி நடக்கமுடியுமா என்பது ஒரு பெரிய பிரச்னை யாக இருக்கிறது. அவனால் அதற்குத் தகுந்தபடி நடக்கமுடியாது என்பது தான் பதில். லவாலுக்கு சாதகமாயுள்ள விஷயங்களைக் குறித்து நான் சொல்லவில்லை. அவன் எல்லா முக்கிய ஸ்தானங்களையும் கைப்பற்றிக்கொண் டிருக்கிறான். அரசாங்கத்திற்குத் தலைவனாக இருப்பதுடன், அயல் நாட்டு இலாகா மந்திரியாகவும் இருக்கிறான். அதாவது ஜெர்மனியுடனும், யுனைடெட் ஸ்டேட்ஸுடனும், கிரேட் பிரிடனுடனும் பிரான்ஸுக்குள்ள பாந்தவ்யங்கள் அவன் ஆதிக்கத்தில் இருக்கின்றன. அவன் உள்நாட்டு இலாகா மந்திரி. அதனால் பிரான்ஸ் தேசம் பூராவிலும் பாதுகாப்பும், துரைத்தனமும் அவன் ஆதிக்கத்திலிருக்கின்றன. அவன் செய்தி இலாகா மந்திரி. அதனால் அவன் காரியத்திற்குத் தக்கபடி பொய் வதந்திகளைத் தயாரித்து பொதுமக்களை நம்பச் செய்வான். மேலும் அவனைப்போல மட்டமான பேர்வழிகளையே மந்திரிகளாத் தேர்ந்தெடுத்திருக்கிறான். அவர்களுக்கும் அவனைப்போல் இழிவான வேலை செய்ய விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். Mr. கிராஸட் என்பவரை ஆரோக்கிய இலாகாவுக்கு மந்திரியாக நியமித்திருப்பதில் எனக்கு உத்ஸாகம் ஏற்படுகிறது. கிராஸட் லவாலின் வெகுநாள் வைத்தியர். லவால் உடலி லிருந்து துப்பாக்கி ரவைகளைத் தோண்டி எடுப்பதற்காகத் தீர்க்க ஆலோசனையின் பேரில்தான் லவால் அவனை வேலைக்கு நியமித்திருக்கவேண்டும். ஏனென்றால் இனிமேல் அடிக்கடி அம்மாதிரி செய்யவேண்டிருக்கும். இப்பொழுது லவால் பிரான்ஸில் முக்கியஸ்தராக இருப்பதால் அவனுக்கு எதிராக நடக்கக்கூடிய தேசாபிமானமும், தைரியமுள்ள எந்த பிரெஞ்சுக்காரராவது அவன் கையில் சிக்கினால் அவனை அடியோடு அழித்துவிடும்படியான மூர்க்கமான நடவடிக்கை களை எடுத்துக்கொள்வான். அவனுக்குப் போதுமான அதிகாரம் கிடைத்து விட்டதென்று தோன்றின பிறகு தான் அவன் திட்டத்தில் இரண்டாம் பாகமான ஜெர்மனிக்கும் பூரா உதவி செய்வதை அனுஷ்டிப்பான். அப்பொழுதுதான் பிரெஞ்சுப் பொதுமக்கள் என்ன செய்வார்கள் என்று தெரியவரும். சுயநலத்திற்காக ஜெர்மானியருக்குத் தக்கபடி நடப்பதற்கு சில பிரெஞ்சுக்காரர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் திட மனதில்லாத்தினாலோ அல்லது தோற்றவர்கள் அம்மாதிரிதான் நடக்கவேண்டுமென்ற மூட நம்பிக்கையினாலோ ஜெர்மானியர் சொல்படி நடப்பார்கள். லவாலும் ஜெர்மன் சாமான் ஏற்றிச்செல்லும் கப்பல்களுக்கு யுத்தக் கப்பல்களைத் துணை அனுப்பியும், அல்லது விஷி அரசாங்கம் இழந்த பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளைத் திரும்பிப் பிடிக்கத் தாக்கியும், பிரான்ஸையும் யுத்தத்தில் எப்படியாவது ஈடுபடும் படி செய்துவிடுவான். ஹிட்லரிடம் ஏதோ சாதகங்கள் பெற்றதுபோல ஏமாற்றி தன்னையும் பலப்படுத்திக்கொள்ளமுயலுவான். ஆனால் லவால் எத்தகைய மனிதன் என்பதும் அவன் என்ன செய்ய எத்தனித்திருக்கிறான் என்பதும் பிரெஞ்சு மக்கள் பெரும்பான்மையோருக்குத் தெரியும். முன் எச்சரிக்கையினால் அவர்கள் பலமடைத்திருக்கிறார்கள். ஸெயிண்ட் நாஸேரில் நடந்த தாக்குதலில் தைரியமுள்ள பிரெஞ்சுக்காரர்கள் தெருவில் வந்து நமது படைக்கு உதவி யளித்தார்கள். பிரான்ஸில் வசிக்கும் நாஸிகளுக்குத்தொந்திரவு கொடுப்பதற்காக டஜன் கணக்காக பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் உயிர்களை இழந்துவருகிறார்கள். அம்மாதிரி இன்னும் கோடிக்கணக்கான ஜனங்கள் இருக்கிறார்கள். இதைக்கண்டு தான் லவால் பயப்படுகிறான். இது காரணத்தினால்தான் அவனால் பிரெஞ்சு மக்களை அடக்கியாளமுடியாதென்றும் நான் நம்புகிறேன்.

## உண்மையில் நமக்கு அவ்வளவு தைரியம் இருக்கிறதா என்று சந்தேகம் கொண்டிருந்தோம்.

## சீக்கிரத்தில் லண்டன் வாசிகள் ஆகாய விமானத் தாக்குதல்களை அறுவெறுப்புக் கொடுக்கும் தொல்லை என்று கருத ஆரம்பித்துவிட்டார்கள்.

## ஆகாய விமானத் தாக்குதலை வெற்றிகரமில்லாமல் செய்ய சாதாரண பொதுமக்களின் சக்தியைப் பொருத்திருக்கிறது

ஏப்ரல்மீ 27௳ திங்கட்கிழமை இரவு $7\frac{1}{2}$-மணிக்கு டெல்ஹி நிலயத்திலிருந்து **A. லெவலின் ஸ்மித் A. R. I. B. A., A. R. P. S.** ஒலிபரப்பியது.

[ஸப்ளை மந்திரி இலாகா P. A. D. பகுதியில் லெவலின் ஸ்மித் ஸடாப் இன்ஸ்பெக்டராக இருந்தார். இப்பொழுது இந்திய அரசாங்கம் தொழில் இலாகா A. R. P. தொழிற்சாலையில் விசேஷவேலை பெற்ற உத்தியோகஸ்தராக இருக்கிறார்].

என்னுடைய சொந்த ஊர் லண்டனில் ஒரு சிறிய ஏழ்மையான பாகத்திலிருக்கிறது. யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து சமீபத்தில் மூன்று மாதங்களுக்குமுன் இந்தியாவுக்கு வரும்வரை அங்கே வசித்தேன். இங்கிலாந்தில் அடிக்கடி விமானப்படையெடுப்பு ஏற்படும் காலங்களில் எல்லாம், நான் அங்கு இருந்தேன். அதனால் விமானத் தாக்குதல்கள் எனக்கு ரொம்ப சகஜமாய் விட்டது. இப்பொழுது இந்தியாவின் சிலபாகங்களில் விமானப்படையெடுப்பு ஏற்படுமோவென்று அவற்றைப்பற்றி மும்மரமாகப் பேசிவரப்படுகிறது.

லண்டன் மாநகரில் மூன்று மாதம் தொடர்ந்தாற்போல் ஒவ்வொரு இரவிலும் விமானத்தாக்குதல் நேர்ந்தது. அது இரவு பூராவும் நீடித்திருக்கும். அதற்குப் பிற்பட்டு 6 மாதகாலம் வரை அடிக்கடி கடுந்தாக்குதல்கள் நேரிட்டன. எல்லாப் படையெடுப்பு காலங்களிலும் நான் அங்குதான் இருந்தேன். கொஞ்ச நாள் கிரமித்து இப்படையெடுப்புகள் மனதிற்கு அதிருப்தியைக் கொடுக்கக்கூடிய வெறும் தொல்லைகள் என்று கருதப்பட்டன. கொஞ்சம் அனுபவமானவுடன் லண்டன் நகரவாசிகள் படையெடுப்புகளைக் கொஞ்சமும் லக்ஷியம் செய்யவில்லை.

இதற்குக் காரணம் முக்கியமாக உலகத்தில் எல்லா பாகங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் லண்டன் வாசிகளுக்கு அனுப்பப்பட்ட அனுதாபமும், வியப்பும் நிறம்பின செய்திகள் அவர்களுக்கு உத்ஸாகத்தை மூட்டினதுதான். அவர்கள் விமானத் தாக்குதலினால் கெடுதல் ஏற்படுமென்று பயமடையவில்லை. தாக்குதல்கள் நின்றவுடன் துரிதமாக அவர்கள் வேலைக்குச் செல்வதற்கே முக்கிய நோக்கம் கொண்டிருந்தார்கள். அனுபவத்தினால்தான் இத்தகைய தன்மை அவர்களுக்கு உண்டாயிற்று. ஆரம்பத்தில் அவ்வாறு இல்லை.

### எல்லா விமானத் தாக்குதல்களைக் காட்டிலும் மிகவும் குழப்பம் உண்டாக்கிய சம்பவம்.

1939-ம் ௵ செப்டம்பர்மீ 3௳ அதிகாலையில் அபாயச் சங்குகள் ஒலித்தன. ஒவ்வொருவருக்கும் வயிற்றில் சங்கடம் உண்டாயிற்று. ஆனால் அப்பொழுது விமானத்தாக்குதலே ஏற்படவில்லை.

அப்பொழுது நடந்த சம்பவம் தான் பிற்பட்டு நடந்த விமானத் தாக்குதல்கள் எல்லாவற்றைக் காட்டிலும் அதிக குழப்பத்தை உண்டாக்கியது. உண்மையில் நமக்கு தைரியம் இருக்கிறதோ என்று கூட சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. மேலும் அரசாங்கத்தில் பாதுகாப்பு முறைகள் ஏற்பாடு செய்திருக்கிறார்களோ என்ற சந்தேகமும் எங்கள் மனதில் குடிகொண்டிருந்தது. ஆனால் அதற்கு ஒரு வருஷம் கிரமித்து வெடிகுண்டுகள் விழ ஆரம்பித்தன. அப்பொழுது அரசாங்கத்தார்களின் விமானப் பாதுகாப்பு முறைகளைப்பற்றி சந்தேகங் கொள்வதற்கே இடமில்லை.

அவர்களடைந்திருந்த பயத்திற்கும், சுற்றிலும் நடக்கும் கொடுமைகளுக்கும் இடையில் லண்டன் வாசிகள் சாதாரண அறிவுள்ள ஜனங்கள் போல் நடந்து கொண்டதைப் பார்க்க அவர்களுக்கே ஆச்சரியமாயிருந்தது. அவர்கள் பீதிக்கு ஆளாகவில்லை. பயத்தால் அவர்கள் ஓடவில்லை. இவ்விதம் எதிர்பாராத தைரியம் அவர்களுடைய மனதில் திடீரென்று தோன்றிற்று. இது காரணத்தினுல் அவர்கள் போர் வீரர்கள் மாதிரி அவ்வளவு தைரியமடைந்து விட்டார்கள். அரசாங்கத்தார் பாதுகாப்பு முறைகளைப்பற்றி அவர்கள் பொருட்படுத்தவில்லை. உண்மையாக ஏராளமாகப் பாதுகாப்பு திட்டங்கள் வெகு நேர்த்தியாக ஏற்படுத்தப் பட்டிருந்தன.

## பொதுமக்கள்.

ஆகாய விமானத் தாக்குதல்களை வெற்றிகரமில்லாமல் செய்ய பொது மக்களின் சக்தியைப் பொருத்திருக்கிறது.

உண்மையில் விமானத் தாக்குதலில் யாவருக்கும் பயமாகத்தானிருக்கும். ஆனுல் தாக்குதல் ஏற்படப்போகிறது என்று காத்துக்கொண்டிருப்பதுதான் மிகவும் சங்கடமானது. தாக்குதல் ஏற்பட்டுவிட்டால் அவர்களுக்கு உண்டான பரபரப்பில் பயம் நீங்கிப் போகிறது.

கிழக்கு லண்டனில் என்னுடைய பழைய சிநேகிதியைப் பற்றி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவள் வயது முதிர்ந்தவள். மிகவும் ஏழை. நான் அவளிடம் அதிக மரியாதை காட்டிவருகிறேன். ஒரு நாள் சாயந்திரம் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகள் போட்டு அதிகமாக சேதம் விளைவித்து வந்தன. ஆகாய விமான எதிர்ப்பு பீரங்கிகள் கடுமையாகச் சுட்டுக் கொண்டிருந்தன. அப்பொழுது என் சிநேகிதி நல்ல நிலைமையில் இருக்கிருளா என்று பார்க்கவேண்டிய முயற்சியுடன் நான் தைரியமாகத் தெருக்களைக் கடந்து சென்றேன். 11 அடி அகல நீளமுள்ள அவளுடைய சிறு சமயலரையில் Mr. டீலி, அவர் மனைவி, ஆல்பி டீலி, நடுவழியில் வந்து தங்கின. Mrs. ஜோன்ஸ் இவர்கள் யாவரும் சுற்றிலும் உட்கார்ந்துகொண்டு டீ குடித்துக் கொண்டும், சீட்டு விளையாடிக் கொண்டும் மிகவும் சந்தோஷமாக இருக்கக் கண்டேன். நாய்களும் பூனைகளும் அவர்கள் பக்கம் விளையாடிக் கொண்டிருந்தன. அவர்கள் வீரர்கள் அல்ல. இவர்கள் மட்டும் இம்மாதிரி இருந்துவிடவில்லை. வெடிகுண்டுகளின் விபத்தைக் கண்டு கலவரப்படாமல் மிகவும் அமைதியாக இருந்தார்கள்.

## முதல் கட்டம்; எல்லாவற்றைக் காட்டிலும் அவர்களுக்கு சோதனை காலம்.

இவைதான் நான் விவரித்திருக்கிறபடி ஆகாய விமானத் தாக்குதலைப் பற்றிய முதல் பாகம். இந்தியாவில் சில இடங்களிலுள்ள ஜனங்கள் இப்பொழுது நான் சொல்லப்போகும் முதல் கட்டத்தில் இருக்கிருர்கள். விமானத் தாக்குதலால் என்ன நேரிடுமோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். எல்லாவற்றைக் காட்டிலும் இதுதான் கஷ்டமான சமயம் என்று தோன்றுகிறது. ஆனுல் ஆகாய விமானத் தாக்குதல் ஏற்பட்டுவிட்டால் அவைகள் உண்மையில் அவ்வளவு பயங்கரமாகத் தோன்ருது. ஆனுல் சாதாரண மனிதன் அவனுக்குச் சொன்னபடி நடக்கவேண்டும் அறிவுள்ளவனுக காட்டிக்கொள்ளவேண்டும். சீனுவிலும் இங்கிலாந்திலும் விமானத் தாக்குதலின்பொழுது எப்படி பொது ஜனங்கள் நடந்து கொண்டார்களோ அப்படியே இந்தியாவிலும் பொதுமக்கள் நடந்துகொள்ளவேண்டும்.

அரசாங்கத்தாரால் என்ன தயாரிப்புகள் செய்யலாமோ அவ்வளவும் செய்திருக்கிருர்கள். என்ன நடக்கிறது என்பதைப்பற்றி உண்மையைத்தான் உங்களுக்கு அறிவிக்கிருர்கள். நான் உங்களுக்குச் சொல்லும் புத்திமதி என்னவென்ருல் 'நீங்கள் அனுவசியமாகக் கவலை கொள்ளவேண்டாம். உங்களைச் செய்யச் சொன்னதை செய்யவும். பொய் வதந்திகளை பரவச்செய்யாதீர்கள். நீங்களும்

அவற்றை நம்பாதீர்கள். இங்கிலாந்தில் எங்களுக்கு ஏற்பட்ட சோதனை நேரத்தில் இந்தியா காட்டின அனுதாபத்திற்கு நான் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். அதுபோல் இந்தியாவுக்கும் கஷ்டங்கள் நேர்ந்தால் ஆங்கிலேயர்களும் உங்களைப் பற்றி நினைத்துக்கொண்டு உங்களுக்காக பிரார்த்தனை செய்வார்கள்.'

---

## எவ்விதம் ஐரோப்பாவைப் படையெடுக்கக் கூடும்? இவ்வருஷம் படையெடுப்பதா, அல்லது பிற்பட்டா?

(''ஸண்டே டைம்ஸ்'' பத்திரிகையின் ஆகாய விமானங்களைப்பற்றி எழுதும் நிருபர் லண்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

ஐரோப்பாவைப் படையெடுக்கவேண்டுமானால் தாக்கும் படைகளுக்கு சாமான்களையும் சைனியங்களையும் ஏற்றிச்செல்லும் கப்பல்களைப் பாதுகாக்க முதன் முதலாக ஆகாய விமான பலம் மேன்மையுள்ளதாக இருக்கவேண்டும். அதாவது ஏராளமான பைடர் விமானங்கள் அடங்கிய விமானப்படைப் பகுதி கப்பல்களுக்கு குடைமாதிரி பாதுகாப்பை அளிக்கவேண்டும். அந்த விமானப் பகுதியில் கொஞ்ச தூரம் வரை சென்று தாக்கக் கூடியதும், ஒருவர் மட்டில் ஏறிச் செல்லும் பைடர் விமானங்களைத்தான் உபயோகிக்கலாம். அவ்விமானம் அதன் தளத்திலிருந்து 80 மைல்களுக்குட்பட்ட பிரதேசங்களில்தான் தாக்கக் கூடும். அக்காரணத்தினால் வெற்றிகரமாகப் படையெடுக்கக்கூடிய பிராந்தியம் மிகவும் குறுகியதாகத்தான் இருக்கும்.

இவ்விதம் விமான பலத்தைக்கொண்டு அடியில் கண்டபடி காரியங்கள் செய்து முடிப்பதற்கு சாத்தியமாயிருக்கும்.

**வட பிரான்ஸைப் படையெடுக்க**—ஆகாய விமானங்கள் பாதுகாப்பதற்கும், சேதப்பட்ட விமானங்களுக்குப் பதில் அனுப்புவதற்கும் சுலபம். மேலும் சமுத்திரக்கரையோரத்தில் செல்லும் சாதாரண கப்பல்களைக் கொண்டே இப்படையெடுப்பை நடத்தலாம்.

**நார்வேயைப் படையெடுக்க**—ஆகாய விமானப் பாதுகாப்பு அளிப்பது கஷ்டம். சேதப்பட்ட விமானங்களுக்கு பதில் அனுப்புவதும் கடினம். கடற்கரையோரமாகச் செல்லும் கப்பல்களைக்கொண்டு படையெடுப்பதும் கஷ்டம்.

**இதாலியைப் படையெடுக்க**—ஆகாய விமானப் பாதுகாப்பு கஷ்டம். சேதமடைந்த விமானங்களுக்கு பதிலளிப்பதும் கஷ்டம் பெரிய கப்பல்களைக்கொண்டு தான் படையெடுக்க முடியும்.

பிரதானமான படையெடுப்பு எங்கு நடந்தாலும் அங்கு தரைப்படை, கப்பற் படை இவைகளுக்கு உதவியாக ஆகாய விமானப்படை தன் முழு பலத்தையும் செலுத்தவேண்டும். இதனால் தாத்காலியமாக மற்றவித தாக்குதல்களை விட்டு விட நேரிடும். ஆகையால் கனமான பாம்பர் விமானங்களின் முக்கிய கடமை என்னவென்றால் யுத்தம் நடக்கும் இடங்களுக்கு சாமான்கள் போய் சேரவிடாமல் போக்குவரத்துகளை வெடிகுண்டுகளால் தாக்கித் துண்டித்துவிடவேண்டியது தான்.

கொஞ்சதூரம் வரை சென்று தாக்கக்கூடிய ஆகாய விமானங்கள் ஏராளமாக போரரங்கங்களில் வந்திறங்கி ஆகாய பலத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு தரையில் நடக்கும் நடவடிக்கைகளிலும், கடலில் நடக்கும் நடவடிக்கைகளிலும் அதிகமாகப் பயன் கிடைக்கும் விதமாக ஈடுபடவேண்டும்.

பிரான்ஸைப் படையெடுக்கத் தீர்மானித்தால் டங்கர்க்கிலிருந்து டீயப் (Dieppe) வரையிலும், இத்துடன் சிலமைல்கள் உள்நாட்டிலும் சென்று தாக்குவதற்குப் போதுமான ஆகாய விமான பலம் நமக்கிருக்கிறது. இடைவிடாமல்

அடுத்த கரைக்கு சாமான்கள் கப்பல்களில் ஏற்றியனுப்புவதற்கு ஆகாய விமானப் பாதுகாப்பும் கொடுக்கக்கூடும். மற்றபடி வேறு எந்த இடமாக இருந்தாலும் ஆகாய விமானப்படை போதுமான உதவியளிக்கக் கூடும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது.

இப்பொழுது நாம் அனுஷ்டித்துவரும் கொள்கையைக் காட்டிலும் அம்மாதிரி பிரான்ஸின் பேரில் படையெடுப்பதினால் ருஷ்யாவிற்கு இந்த வருஷத்தில் அதிக உதவி ஏற்படுமா? அவ்வித படையெடுப்பு அதிக எதிரி ஆகாய விமானங்களை மேற்குப்பக்கம் திருப்பிவிடப்படமாட்டா. மேற்குபாகத்தில் ஜெர்மனிக்கு 30, 40 படை பகுதிகள் இருப்பதாகத் தெரிகிறது. அவைகளுக்கு அதிக விமான பலம் இல்லாவிட்டாலும்கூட நாம் கரையில் இறக்கக்கூடிய படைகளைத் தாக்குவதற்கு அந்தப்படை பகுதிகளே போதுமென்று ஜெர்மனி எதிர்பார்க்கிறது. இன்னும் நம்முடைய ஆகாய விமானப்படை பலமும், தரைப்படை பலமும் அதிகமாகும் வரை, நாம் படையெடுப்பை ஒத்தி வைப்பதினால் அநேக சாதகங்கள் அடையலாம். மேலும் ருஷ்யாவிற்கு அந்தப் போர்முனையில் உபயோகப்படும்படி அநேக விமானங்கள் அனுப்பிவருகிறோம். ஆனால் படையெடுக்கக் கப்பல்களில் சாமான்களையும், ஆட்களையும் அனுப்பிக்கொண்டிருந்தால் ருஷ்யாவிற்கு சாமான்கள் அனுப்புவதற்குக் கப்பல்கள் கிடைக்காமல் போய்விடும்.

இவ்வருஷத்தில் மேற்குப் புறத்தில் ஆகாய விமானப் போர் நடத்திவருவது தான் இரண்டாவது போர்முனை. அது முக்கியமானதாகவும், பயன்தரக்கூடியதாகவும் இருக்கிறது. லுப்ட்வாபியைச் சேர்ந்த அநேக விமானங்களை மேற்குப் போர்முனைக்குத் திருப்புவதிலும், நஷ்டம் உண்டாக்குவதிலும், கிழக்கில் ருஷ்யாவிற்கு ஆகாய விமான பலம் அதிகரிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டு வருகிறது. கைத்தொழிலை அழித்துவருவதில் எதிரியின் யுத்தப் பிரயத்தனமும், பொதுமக்களின் உற்சாகமும் குன்றிவருகிறது.

---

# விமானத் தாக்குதல்களும், ஜப்பானின் யுத்த முயற்சியும்.

(ஜான் மாக்டோனல்டு என்பவரால்).

ஜப்பான் பேரில் விமானங்கள் வீசி சேதத்தை விளைவிப்பதைப்பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அங்குள்ள வீடுகள்யாவும் காய்ந்த மரப் பலகைகளால் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் எளிதில் தீப்பற்றிவிடும். மேலும் அவ்வீடுகள் ஒன்றோடொன்று நெருக்கமாகக் கட்டப்பட்டிருப்பதால், ஒரு வீட்டில் நெருப்புப் பிடித்தால் வரிசையாக அநேக வீடுகள் தீபிடித்துவிடும். அதனால் ஒரு பட்டணத்தில் பெரும் பாகத்திலுள்ள வீடுகள் சேதமாய்போய்விடும். அதை அணைப்பதற்கு நல்ல வசதிகள் கிடையாது. அங்கு தண்ணீர் அகப்படுவதே ரொம்ப துர்லபம். மேலும் தண்ணீர் கொண்டுவருவதற்கு வாளிகளைத்தவிர வேறு வசதியும் கிடையாது.

இவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும், நெருப்பை அணைப்பதற்குத் தங்களால் முடிந்த முயற்சிகளை எடுத்துக்கொள்ளுகிறார்கள். நெருப்பு அணைக்கும் கோஷ்டிக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. மேலும் காயமடைந்தவர்களுக்குப் பிரதம சிகிச்சைக்கு வேண்டிய பயிற்சியும், மற்றபடி விமானப்படையெடுப்புப் பாதுகாப்பு வேலைகளுக்கு வேண்டிய பயிற்சியும் சாதாரணமாக எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. நெருப்பு அணைக்கும் கோஷ்டிக்கு அளிக்கப்படும் பயிற்சியைப் பார்ப்பதற்கு விநோதமாக இருக்கும். ஏனென்றால் அதற்குள்ள சாதனங்கள் யாவும் பழமையானவை. கத்தலும், இறைச்சலும் பண்டைகாலத்ததைப் போலிருக்கும். இவையெல்லாம் பார்ப்பவர்களுக்கு ரொம்ப விநோதமாகயிருக்கும். ஆனால், ஜப்பானியருக்கு உள்ளூர பயமிருந்துகொண்டேயிருக்கும். அப்படி அவர்கள் பயப்படுவதற்குக் காரணமிருக்கிறது. அவர்கள் வசித்துவரும் வீடுகளும் அவர் நடத்திவரும் தொழில்களும் ஆபத்துக்குள்ளாகியிருக்கின்றன. அவற்றைக்

காட்டிலும் அந்த தேசம் பூராவிலும் உள்ள உற்பத்தி தொழிற்சாலைகளும் தாக்கப்படுகின்றன. உற்பத்தி செய்த பொருள்களை ஏற்றியனுப்புவதும் சாத்தியப்படவில்லை.

## சமுத்திரக்கரையோரமுள்ள இருப்புப்பாதை.

ஜப்பானில் முக்கியமாக இருப்புப்பாதை தெற்கே நாகாஸாகியிலிருந்து வடக்கே டோகியோவரையிலும் சமுத்திரக்கரையோரமாகச் சுற்றி வளைத்துப் போகிறது. இந்த மார்க்கம் ஆகாயத்திலிருந்து தாக்குவதற்கு வெகு சுலபம். அதிலுள்ள பாலங்களையும், கணவாய்களையும் சுலபமாக உடைத்துவிடக்கூடும். டோகியோவிலிருந்து சுமார் 50 மைலிலிருக்கும் டண்ணு (Tanna) கணவாயில் குண்டு போட்டால் வெகுகாலம் அந்த மார்க்கம் துண்டித்துப்போய்விடும். இந்தக் கணவாய் உலகத்திலேயே மிகவும் நீளமானது. அதைக்கட்ட நாலு வருஷம் பிடித்தது. ஒரு வெடிகுண்டு அதைத்தாக்கினால் அதிலுள்ள அநேக உஷ்ண நீர் ஊற்றுகள் வெளிக்கிளம்பிவிடும். அவை வெளிக்கிளம்பினால் அந்தப் பாலம் பூராவும் உடைந்துவிடும். இதைக்கட்டும்பொழுது உஷ்ணமான ஊற்றையும், சகுதியையும் அடைக்கப் பிரயத்தனப்பட்டதில் ஆயிரக்கணக்கான வேலைக்காரர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

## கைத்தொழில்கள் சமுத்திரக்கரைக்கருகில்.

ஜப்பானின் பிரதானமான கைத்தொழில்கள் சமுத்திரக்கரைக்கருகாமையிலிருக்கின்றன. கோப், ஒஸாகா முதல் டோகியோ வரையுள்ள இருப்புப் பாதை நெடுகிலும் பெரிய பண்டகசாலைகளும், தொழிற்சாலைகளும் சமுத்திரக் கரையிலிருந்து பத்து மைலுக்குள்ளாகவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஜப்பான் பாதுகாப்பில் ஜீவநிலையான இந்த இடங்கள்தான் ஜப்பானைத் தாக்க வரும் படைக்கு முதலில் கண்ணில்படும். இவைதான் முதன்முதலாக தாக்கப்படும்.

ஜப்பானில் கப்பல்கட்டும் பெரிய நகரங்களில் ஒன்றான கோப் என்னுமிடத்தில்தான் காவாஸாகி (Khwasaki) கப்பல் துறைகளும் மிஸுபிஷி (Misubishi) வெடிமருந்து உற்பத்தி சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த உற்பத்தி செய்யும் பிராந்தியம் சமுத்திரக்கரையிலிருந்து ஆரம்பித்து $1\frac{1}{2}$ மைல் அகலமுள்ளதாக இருக்கிறது. அந்த நகரத்திற்குப் பின்புறம் ஒரு கல்லெறி தூரத்தில் 1,000 அடி உயரமுள்ள மலைத்தொடர் இருக்கிறது. முக்கிய கைத்தொழில்களெல்லாம் இந்தக் குறுகலான இடத்தில்தான் இருக்கின்றன. மலைகள் கிழக்கே ஒஸாகா வரையிலும் பரவியிருக்கின்றன. ஒஸாகாவுக்கு சற்று வடகிழக்கே இரண்டு மலைத்தொடர்களுக்கு இடையேயுள்ள பள்ளத்தாக்கில் நாகோயா, கியோட்டோ என்ற பட்டணங்கள் இருக்கின்றன. சமுத்திரத்திலிருந்து அவையும் தாக்கக்கூடும்.

## பெரிய கப்பற்படை தளம்.

இன்னும் கிழக்கே யுத்தப் பொருள்கள் தயாரிக்கக்கூடிய ஜப்பானில் மிகவும் முக்கியமான மூன்று பட்டணங்கள் இருக்கின்றன. அவையாவன: யோகொஸுகா, யோகஹாமா, டோகியோ அவையும் கடலுக்கு சமீபத்தில் இருக்கின்றன. யோகாஸுகா ஜப்பானில் பெரிய கப்பற்படை தளம். இங்கு தான் 42,000 டன் நிறையுள்ள பெரிய யுத்தக் கப்பல்களில் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. யோகஹாமா ஜப்பானில் பெரிய முக்கியமான துறைமுகம். ஆகாய விமானங்களுக்கு மோட்டார் உற்பத்தி செய்யுமிடங்களில் அது ஒன்று. யோகஹாமாவுக்கும் டோகியோவுக்கும் நடுவில் சமுத்திரக்கரையோரமுள்ள ஜில்லாவில் வெடிமருந்து உற்பத்தி சாலைகள் வரிசையாக இருக்கின்றன.

தெற்கே நாகாஸாகிற்கு அருகிலுள்ள ஸாஸியோ என்ற இடத்திலும் மேற்கு சமுத்திரக்கரை யோரமாக இருக்கும் கூரி என்ற இடத்திலும் பிரக்யாதி பெற்ற

கப்பற்படை தளங்கள் இருக்கின்றன. அங்கு அவற்றின் சக்திக்குத் தகுந்தபடி கப்பற்படைக்கு வேண்டிய கப்பல்கள் கட்டப்படுகின்றன. கோபுக்குத் தென் மேற்கில் உள்நாட்டில் கடலோரமாய் இருக்கும் யூனே என்ற இடம் நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டுவதற்கு முக்கியமான தளம். இந்தத் துறைமுகம் அநேகத் தீவுகளுக்கு இடையிலிருப்பதால் உலகத்தாருக்கு இதைப்பற்றி அதிகம் தெரியாது. இருந்த போதிலும் ஜப்பானுக்கு அநேக நீர் மூழ்கிக் கப்பல்கள் இங்கு கட்டப்படுகின்றன.

ஜப்பானின் யுத்த முயற்சிக்கு மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு இடமும் மிகவும் முக்கியமானவை. விமானத் தாக்குதலுக்கு வெகு சுலபமான இலக்காக இருப்பதால் அவைகளுக்கு பெருத்த ஆபத்து ஏற்பட்டுவிடும்.

---

## ஹிட்லர் சொல்லுகிறபடி ஜெர்மனியில் அவ்வளவு 'யு' படகுகள் இல்லை.

(H. C. பெர்ரேபி என்பவர் லண்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

ஜெர்மன் மந்திரி சபையில் ஹிட்லர் பேசியதில் "சென்ற உலக யுத்தத்தில் இருந்த 'யு' படகுகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் இப்பொழுது மிகவும் அதிகமிருக்கிறது", என்று குறிப்பிட்டான். இந்த யுத்தம் ஆரம்பித்த 51 மாதங்களில் அநேக 'யு' படகுகள் கட்டப்பட்டு, மிதக்கவிடப்பட்டிருக்கின்றன. இவைகளின் மொத்தம் 344 அல்லது 345 தான். பிரிடிஷார் சொல்வதற்கும், ஜெர்மானியார் சொல்வதற்கும் எண்ணிக்கையில் ஒரு படகு தான் வித்தியாசம். ஜெர்மனிக்கு வெளியேயிருக்கும் கப்பல் கட்டும் நிபுணர்கள் இந்த யுத்த காலத்தில் மாதத்திற்கு 9 படகுகள் தான் கட்டி முடிக்கப்படுமென்று ஏகமனதாகச் சொல்லுகிறார்கள். இந்தப்படி 30 மாதங்களுக்கு 270 யுத்தப் படகுகள் புதிதாக கட்டிச் சேர்த்திருக்கலாம். சென்ற யுத்தத்தில் 50 மாதங்களில் கட்டிக் கொடுக்கப்பட்டவைகளைக் காட்டிலும் இது மிகவும் குறைவு தான்.

### கப்பற்படை வீரர்கள் சரியானபடி பயிற்சி பெற்றவர்களல்ல.

உத்தியோகமுறையில் வெளிவந்த ஜெர்மன் தேசச் சரித்திரங்களிலிருந்து சென்ற யுத்தத்தில் நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சி சாலையில் 18,000 உத்தியோகஸ்தர்களும், வேலைக்காரர்களும் அவசரமாகப் பயிற்சி பெற்றுக்கொள்ள நேரிட்டது என்றும், அப்படியிருந்தும் ஒவ்வொரு 'யு' படகிலும் சண்டைக்குப் புறப்பட்ட பிறகும் கூட வேலை கற்றுக்கொள்ளவேண்டியவர்கள் 10, 12 பேர்கள் இருந்தார்கள் என்றும் தெரிகிறது. இருந்தபோதிலும் 1914-ம் வருஷ முதல் 1918-ம் வருஷம் வரையில் கப்பல்கள் நிர்மாணிப்பதிலும், அவைகளில் பயிற்சி பெருவதிலும், ஜெர்மன் கப்பற்படை திறமையற்றது என்று ஒருவரும் சொல்லவில்லை.

இந்நிலைமையில் நாஸிகள் போட்டுள்ள காலவரையில் பாதிக்குள்ளாக கெய்ஸர் 'யூ' படகு மாலுமிகளைப்போல் $1\frac{1}{2}$ மடங்கு அதிகமான மாலுமிகள் தயாரானதாகச் சொல்லுவது நம்ப முடியாததாகும். ஆதலால் ஹிட்லர் ரீஷ்டாக் சபையில் பேசியதில் விஷயம் ஒன்றுமில்லை. ஜெர்மன் நீர்மூழ்கி ஸ்தாபனத்தைப்பற்றி அறிந்து கொண்டவர்களுக்கு அவன் மிகைப் படுத்திச் சொல்லியிருக்கிறான் என்று தெரியும். ஜெர்மானியரில் சிலர் அதைக் கேட்டு சந்தோஷிக்கலாம். ஆனால் உலகத்தார்களை அவ்வார்த்தைகள் ஏமாற்றி விடமுடியாது.

### ஹிட்லரின் தந்திரம்.

பிரிடிஷ் கப்பல் இலாகா அறிக்கைகளில் 400, 500 எண்ணிக்கை கொண்ட படகுகளைப் பற்றி பிரஸ்தாபம் இருப்பதிலிருந்து ஜெர்மானியர்கள் கட்டியிருக்கும் படகுகள் அந்த எண்ணிக்கைக்கு மேலிருக்கும் என்று சிலர் வாதிக்கலாம். அதற்கு சுலபமான பதில் இது தான். ஜெர்மன் கப்பற்படையில் 200 முதல் 300 வரை நம்பர் போட்ட படகுகள் இருந்ததாக ஜெர்மன் அல்லது பிரிடிஷ் அதிகார வர்க்கத்தில் யாதொரு பிரஸ்தாபமே கிடையாது. 1939-ம் வருஷம் சரத் காலத்திற்குப் பிறகு உலகத்தாரை ஏமாற்ற ஜெர்மன் படகுகளுக்கு நம்பர் போடு வதில் 100-க்குப் பிறகு 400-லிருந்து ஆரம்பித்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

இது ஒரு நல்ல தந்திரம் தான். கெய்ஸரின் கப்பற்படையின் பலத்தைக் காட்டிலும் தனக்கு அதிக பலம் இருப்பதாக பிறர் நம்பி விடுவார்கள் என்று ஹிட்லர் எண்ணினன். ஆனல் இதற்கு முன்னடியே 200-லிருந்து 400-வரை எண்ணிக்கை கொண்ட படகுகளைக் குறித்து ஜெர்மன் கப்பற்படை இலாகா சொல்லாமல் போனது பெரிய தவறு. அப்படிச் சொல்லியிருந்தால் ஜெர்மனி உலகத்தாரை ஒருக்கால் ஏமாற்றியிருக்கலாம்.

---

## ஜெர்மனியின் உற்பத்தி சாதனங்கள் வரவர குறைந்து கொண்டுவருகின்றன.

---

**(வாஷிங்டனிலிருந்து கேபிள் மூலமாய் வந்த செய்தி).**

ஜெர்மன் தொழிற்சாலைகளின் உற்பத்தி குறைவுபட்டே வருகிறது. அவ்விதக் குறைவினல் யுத்தத்தில் ஜெர்மனிக்கு பெருத்த தோல்வி ஏற்பட்டுக்கொண்டு வருகிறதென்று "யுனைடெட் ஸ்டேட்ஸ் வாரச்செய்தி பத்திரிகை" கூறுகிறது. மேலும் ஹிட்லரின் புதிய திட்டம் சரியாக நடைபெறவில்லை. ஜெர்மன் ராணுவத்திற்கு வேண்டிய முஸ்தீப்பு யாவும் தயார் செய்து அதன் பலத்திற்கு மூலாதாரமாகயிருந்த தொழிற்சாலைகள் ஒவ்வொன்ருக அழிந்து கொண்டு வருகின்றன.

முதலாவதாக ஆக்கிரமித்த ஐரோப்பிய நாடுகள் ஜெர்மானியருக்கு இதற்கு முன் ஸப்ளை செய்துவந்த பொருள்களில் அதே அளவுப் பொருள்களை இப்பொழுது அனுப்புவதில்லை. இதற்குக் காரணம் ஜெர்மன் அரசாங்கத்திற்கு விரோதமாக நடக்கும்படி அங்கு பிரசாரம் செய்யப்படுகிறது. ஹிட்லர் போட்ட திட்டத்திற்குக் குறைவாக யுத்த தளவாடங்கள் இப்பொழுது செய்யப்படுவதினல் தொழிற்சாலைகளின் தலைவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டோ, அல்லது ஜெயிலில் அடைபட்டோ விடுகின்றனர். இதன் பயனுக ஜெர்மனியின் கைத்தொழிலுக்கு அழிவு காலம் வந்துவிட்டது என்று உடனே சொல்லிவிடமுடியாது. ஆனல் ஹிட்லர் தன்னிஷ்டம்போல் ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

### தொழிலாளிகளின் குறைவு.

நாஸிகளின் வசந்த காலத் தாக்குதலின் திட்டங்களுக்கு தொழிலாளிகளின் குறைவுதான் பெருத்த இடையூருக இருக்கிறது. ஜெர்மனி இனிமேல் தொழிலாளிகளை ஸப்ளை செய்யமுடியாத நிலைமையிலிருக்கிறது. அதனல் ஆக்கிரமித்த தேசங்களில் இளைஞர்கள், சிறுபெண்கள், வயதுசென்ற ஸ்திரீ, புருஷர்கள் இவர்களைச் சேர்ப்பதற்காக ஹிட்லரின் ஏஜெண்டுகள் எங்கும் சென்று தேடிப்பார்த்து

வருகிறார்கள். ஜெர்மனியில் தொழிலாளிகள், சைனியங்கள் இவைகளின் சங்கியை வரவரகுறைந்துவருகிறது. அங்கு குறைந்த பக்ஷம் 2,40,00,000 தொழிலாளிகள் தான் வேலைசெய்துவருகிறார்கள். ஒரு கோடி போர்வீரர்கள் சண்டையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ருஷ்யப் போர்முனையிலிருந்து ஒவ்வொரு மாரிகாலத்திலும் 20 அல்லது 30 லக்ஷம் துருப்புகள் ஓய்வு எடுத்துக்கொள்ள ஜெர்மனிக்கு வந்து, அங்கு உள்நாட்டுத் தொழிற்சாலைகளில் வேலைசெய்வது வழக்கம். ஆனால் இப்பொழுது ருஷ்யச் சைனியங்கள் வெற்றிக்குமேல் வெற்றியடைந்து வருவதினால் அத்துருப்புகள் முன்போல் ஓய்வு எடுத்துக்கொள்ள வருவதற்கு முடியவில்லை. அதனால் 200 ஜெர்மன் படைப்பகுதிகள் அதாவது மொத்தத்தில் 35,00,000 பேர்கள் கிழக்குப் போர்முனையிலேயே தங்கி விட்டார்கள். நாஸி சைனியத்தில் முதல் தரமான போர்வீரர்களில் சுமார் 10 லக்ஷம் பேர்கள் போர்முனையில் இறந்து விட்டனர். இன்னும் காயமடைந்தவர்கள், இருப்பிடம் தெரியாமலிருப்பவர்கள் இவர்களின் எண்ணிக்கையை இறந்தவர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தால் 25,00,000 ஜனங்களுக்கு மேலாகும்.

மேலும் ஆக்கிரமித்த நாடுகளிலிருந்து யுத்தத்திற்கு ஆட்கள் சேகரிக்கும் விஷயமாக பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. பால்கன் நாடுகளிலிருந்து ஆட்கள் சேகரிப்பதற்கு நிர்பந்திக்கப்படுவதாகவும், அவைகள் அநேகம் பேர்களை அனுப்புவதாகவும் சொல்லப்படுகிறது. பிரான்ஸில் ருஷ்யப் போருக்காக ஆட்கள் சேகரிப்பதில் 5,000 பேர்கள்தான் சேர்ந்தார்கள். ஸ்பெயினிலிருந்து ருஷ்யப் போர்முனைக்கு ஒரு விசேஷப் பகுதி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் நாஸிகள் விருப்பத்திற்கு எல்லையில்லை.

## மருந்துகள் தேவை.

மேல்பார்வைக்கு மருந்து முதலிய அத்தியாவசியமான பொருள்கள் விஷயமாக ஜெர்மனியின் நிலைமை கெட்டிருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் ஜெர்மானியருக்குச் சில மருந்துகளும், மூலிகைகளும் அவசியம் தேவை. ரசாயன முறைப்படி செய்யும் ரப்பர் இருப்பு குறைந்துவருகிறது. ரப்பர் உற்பத்தி செய்யும் இரண்டு தொழிற்சாலைகளில் ஒன்று வெடிகுண்டால் தாக்கப்பட்டது. அவர்களுக்கு பருத்தி, ரோமம், கொழுப்பு, செம்பு, துங்கிஸ்தான், நிக்கல், வெடி உப்பு முதலியவை தேவையாக யிருக்கின்றன. ருஷ்ய பூ தகன முறையினால் பிரான்ஸ், ஸெகோஸ்லோவாகியா, போலாந்து இந்நாடுகளிலிருந்து ஜெர்மானியருக்குக் கிடைத்த வண்டிக்கணக்கான கொள்ளைப் பொருள்களைப்போல இப்பொழுது ருஷ்யாவில் கிடைக்கவில்லை.

1942-ம் வருஷத்தில் ஜெர்மனியில் யந்திரத்திற்குப் போடும் எண்ணெயும், மின்சார சக்தியும் குறைவாக இருந்து வருவதினால் தொழிற்சாலைகளின் உற்பத்தியில் குறைவு ஏற்படும்போல் தெரிகிறது. இப்பொழுது எண்ணெய் உற்பத்தியும், அதன் செலவும் ஒன்றுக்கொன்று சமனாக இருந்துவருகிறது. அதன் போக்குவரத்து முறையில் மசகெண்ணெய்க் குறைவினால் பெருத்த இடையூறுகள் நேரிட்டு வருகின்றன. பிரான்ஸ் தோற்றவுடன் அங்கிருந்து 2,50,000 சரக்கேற்றிச் செல்லும் மோட்டார்களையும், இன்னும் 2,500 ரயில் வண்டிகளையும் ஜெர்மானியர் எடுத்துக்கொண்டார்கள். பிற்பட்டு இன்னும் அதிகம் எடுத்துககொண்டிருக்கிறார்கள்.

இம்மாதிரி பொருள்கள் குறைந்துவருவதில் ஜெர்மனியின் பொருளாதார நிலைமை குறைந்துகொண்டுவருகிறது. இந்த வருஷத்திலாவது யுத்தத்தில் ஜயிக்க மனிதர்களையும் யந்திரங்களையும் சேர்க்க ஜெர்மனி முழுப் பிரயத்தனத்தையும் எடுத்துக்கொள்ளுகிறது. ஆனால் "இதில் ஏற்படும் பிளவைப்பார்க்க ஜெர்மனி தோன்றுவிடும் போல் தெரிகிறது" என்று அப்பத்திரிகையில் கண்டிருக்கிறது.

# ஆக்கிரமித்த பிரதேசங்களில் ஜப்பானியர் கையாளும் முறை.

(W. A. ஸின்கிளேர் லண்டனிலிருந்து 'லிஸ்னர்' (Listner) என்ற பத்திரிகைக்கு கேபிள் மூலம் அனுப்பிய செய்தி.)

ஜப்பானிய பாஷை தெரிந்தவர்களுக்கு அநேக விஷயங்கள் தெரியவரலாம். ஜப்பானியர்கள் உள்நாட்டு ஜனங்களுக்கு ஒலிபரப்புவதைக் கேட்கவும் கூடும். அவர்கள் சொல்வதிலிருந்து ஜப்பானியர்கள் வெற்றியடைந்த நாடுகளிலிருந்து ஈவிரக்கமில்லாமல் ஏராளமாகப் பொருள்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என்பது வெளியாகும். ஆக்கிரமித்த ஐரோப்பாவில் ஜெர்மானியர் எவ்விதம் நடந்துகொண்டார்களோ அதே மாதிரியாகவே ஜப்பானியர் தாங்கள் ஆக்கிரமித்த ஆசியா நாடுகளிலும் நடந்து வருகிறார்கள். அவர்கள் ஜெர்மானியரை ஒத்தே பிரசாரம் செய்து வருகிறார்கள். அதன் முறை வெகு சுலபம். ஹிட்லரைப் போல் வாக்குறுதி வெகு எளிதில் கொடுக்கிறார்கள். ஆனால் அவைகள் நிறைவேற்றப்படமாட்டா. மேலும் ஜெர்மானியரைப் போலவே ஜப்பானியரும் ஆக்கிரமித்த தேசத்தினருக்கு சாதகமாகவே தாங்கள் வந்திருப்பதாகவும், அதன் பயனாக எங்கும் சுபிக்ஷம் சந்தோஷம், ஸ்வதந்திரம் எல்லோருக்கும் கிடைக்கப் போவதாகவும் சொல்லி வருகிறார்கள்.

## ஜப்பானியர் எதிர்பார்ப்பது.

மௌனமாக ஜப்பானியர்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டினரையும், அவர்களுடைய சொத்துக்களையும் கொள்ளையடித்து தங்கள் உபயோகத்திற்கே வைத்துக்கொள்ளுகிறார்கள் என்று கல்வி வாசனையே இல்லாதவர்களுக்கும்கூட இவ்வக்கிரமங்கள் சில காலம் கிரமித்து தெரிந்துவிடக்கூடும். இதை ஜப்பானியர்கள் அறிவார்கள். இருந்த போதிலும் அவர்கள் தெரிந்துகொள்வதற்குள் காரியம் மிஞ்சிப்போகுமென்று ஜப்பானியர்கள் நம்பிவருகிறார்கள். ஆக்கிரமித்த ஐரோப்பாவில் ஜெர்மானியர் கொள்ளையடித்ததை சிலாகித்துச் சொல்வதுபோல, ஜப்பானியர்களும் இனி கொள்ளையடிப்பதற்குப் போட்டிருக்கிற ஏற்பாடுகளைக் குறித்தும், இதுவரை கொள்ளையடித்ததின் பயன்களைக் குறித்தும் சிலாகித்துச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இவ்விதம் வரிசைக் கிரமமாக கொள்ளையடிப்பதற்கு வெகு வருஷங்களுக்கு முன் முதற்கொண்டே திட்டம் போட்டிருந்தார்கள். வடக்கு ஸெலிபஸ் தீவிலுள்ள மினடோவிலிருந்த ஜப்பானிய ஸ்தானீகர் வசமிருந்த தஸ்தாவேஜுகளை டச்சு போலீஸார் கைப்பற்றி பார்வையிட்டார்கள். அப்பொழுது டச்சுக் கிழக்கு இந்தியத் தீவுகளில் ஜப்பானியர்கள் அரசியல் நிர்வாகத்தை நடத்துவதற்காக போட்டிருக்கும் பூரா திட்டங்களும் அவைகளில் கண்டிருந்தன. நிதி நிர்வாகத்திலும் கூட இம்மாதிரி கொள்ளையடித்து வருகிறார்கள். அதேமாதிரியாகவே தான் அங்குள்ள விளைபொருள்களையும் கொள்ளையடிக்கிறார்கள். ஆக்கிரமித்த பிரதேசங்களில் ஜப்பானியத் தொழிற்சாலைகள் எங்கெங்கு வைக்கக்கூடுமோ ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. சணல் முதல் ரப்பர் சாமான்கள் வரை எல்லாவித சாமான்களும் உற்பத்தி செய்வதற்கு லாயக்காக பாங்காக் பகுதிகளில் ஏராளமாக தொழிற்சாலைகள் ஏற்பட்டிருப்பதைக் குறித்து ஜப்பானியர்கள் சந்தோஷமாக பேசிக்கொள்ளுகிறார்கள்.

## ஜப்பானிய பாஷையைப் பரவச்செய்தல்.

இவ்விதம் ஜப்பானியர்கள் அந்நிய நாடுகளில் பொருள்களை மட்டில் கைப்பற்றிக்கொள்ள பிரயத்தனப்படவில்லை. எங்கும் ஜப்பானிய சாம்ராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக முயற்சிக்கின்றனர். ஆக்கிரமித்த பிரதேசங்களில் ஜாதி, மதம், பாஷை முதலியவைகளையும் அழிக்கப்பார்க்கிறார்கள். ஜப்பானிய பாஷையை சங்கிரமமாகச் செய்து எல்லோரும் எளிதில் கற்றுக்கொள்வதற்கு ஜப்பானிய

அரசாங்கம் ஏற்பாடு செய்துவருகிறது. அதில் சுலபமான 300 எழுத்துக்களும், சாதாரணமான வார்த்தைகளுமே அடங்கியிருக்கின்றன. சாதாரணமாக பேசிப் புழங்க அது போதுமானவை. இம்மாதிரி ஜப்பானிய பாஷையைப் பரவச் செய்வதற்குப் போட்டிருக்கும் திட்டத்தை துரிதமாக அமுலுக்குக் கொண்டுவருகிறார்கள். மேலும் ஒலிபரப்புகளில் ஜப்பானிய பாஷை பரவி வருகிறதென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. உதாரணமாக பாங்காக்கில் ஜப்பானிய பாஷை போதிக்கும் பள்ளிக்கூடத்தில் சென்ற வருஷத்தில் இருந்த பையன்களைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமான பையன்கள் இவ்வருஷம் சேர்ந்திருப்பதாக ஒலிபரப்பப் பட்டது.

ஜப்பானின் ஆட்சியைப்பற்றி பெரும்பான்மையாகத்தான் மேலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. மேற்கு பாகத்தில் எவ்விதம் ஹிட்லர் எல்லா நாடுகளையும் அடிமையாக்க நோக்கம் கொண்டிருக்கின்றாரோ, அதேமாதிரியாகவே கிழக்குப் பாகத்திலும் ஜப்பானியர்களின் நோக்கங்கள் இருந்து வருகின்றனவென்று இதைப் பார்த்தாலேயே தெரியவரும்.

---

## ஜனநாயகங்களின் பலமான அம்சங்கள்.

(6—2—42உ இஸ்தான்புல் 'தான்' பத்திரிகையில் இருந்து ஸெக்ரையா ஸெய்தல் என்பவரால்).

யுத்தம் ஆரம்பித்தது முதல் ஜனநாயகங்கள் பலம்குன்றியிருப்பதாகவே தோன்றின. $2\frac{1}{2}$-வருஷங்கள் யுத்தம் நடந்தும் அவை இன்னும் தற்காப்பு முறையிலேயே இருக்கின்றன.

மேலும் இப்பொழுதும்கூட லிபியாவில் அவர்களால் எதிரிகளை எதிர்த்து போராடுவதற்கு முடியவில்லை. தூரக்கிழக்கில் எல்லாக் கப்பற்படை தளங்களையும், விமான நிலயங்களையும், அவைகள் இழந்துவிட்ட போதிலும் வெற்றி நிச்சயமென்று கூறிவருகின்றன. இவ்வளவு நம்பிக்கையை உண்டாக்குவதற்கு அவர்களிடம் என்ன இருக்கிறது? எந்த ஆதாரத்தைக்கொண்டு அவைகள் இந்த யுத்தத்தில் ஜயம் பெறப்போகின்றன.

ஜனநாயகங்கள் நம்பியிருக்கும் முக்கிய விஷயங்கள் ஆறுவகையாக இதன்டியில் காணப்பட்டிருக்கின்றன.

1. இதுவரையிலும் கடலாதிக்கம் பெற்றிருக்கும் வல்லரசு எதுவும் எந்தச் சண்டையிலும் தோற்கடிக்கப்படவில்லை. கடலாதிக்கம் பெறாத நாடுகள் எப்பொழுதும் வெற்றியடைந்ததில்லை. கடலாதிக்கத்தினால்தான் ஜெர்மனிக்கு அயல் நாட்டுப் பொருள்கள் கடல் மார்க்கமாய் வருவதை ஜனநாயகங்கள் தடுத்து விட்டன. ஆனால் உலகத்தில் முக்கால் பங்கு நாடுகளிலுள்ள பொருள்களை எல்லாம் ஜனநாயகங்கள் பெறக்கூடிய சாதகமிருக்கிறது. பஸிபிக் சமுத்திரத்தில் தாத்காலிகமாக அவைகளின் ஆதிக்கம் பரிக்கப்பட்டாலும் சிறிது காலத்திற்குள் அவைகள் ஆதிக்கத்தைத் திரும்பப்பெறக்கூடும்.

2. ஜெர்மனிக்கு யுத்தப்பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுள்ள பிராந்தியங்கள் எல்லாம் பிரிடிஷ் விமானப்படை பலத்தினால் வெடிகுண்டு போட்டு தாக்கப்படுகின்றன. ஆனால் அமெரிக்காவிலும், சாம்ராஜ்ய நாடுகளிலும் உள்ள தொழிற்சாலைகளெல்லாம் எதிரி விமானங்கள் தாக்காமல் மறைக்கப் பட்டிருக்கின்றன. ஜனநாயக நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி

செய்யும் சக்தியானது ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்படும் சக்தியைக் காட்டிலும் பன் மடங்கு அதிகம்.

3. யுத்தத்திற்காக செய்யப்படும் கைத்தொழில்களில் ஜெர்மனி அதன் உன்னத நிலையை அடைந்துவிட்டது. ஆனல் நேசதேசத்தார்களோ இப் பொழுதுதான் கைத்தொழில் ஆரம்பித்திருக்கிருர்கள். யுத்த ஆரம்பத்தில் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருந்த சாதகம் நாளுக்கு நாள் குறைந்துவருகிறது. இந்த யுத்தத்தில் நேசதேசத்தார்கள் தொஞ்சு கொடுத்து சமாளித்து வருவதாக இருந்தால் நேசதேசத்தார்களுக்கு முன் ஜெர்மானியர்கள் வெகுகாலம் சமாளித்து இருக்க முடியாது.

4. ஜெர்மனி இந்த யுத்தத்தில் ஜயமடைய வேண்டுமானல் ஏற்கனவே இந்த யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்திருக்கவேண்டும். அட்லாண்டிக் சமுத்திரத்தில் நடந்த போரிலாவது கிழக்கு படையெடுப்பிலாவது ஜெர்மனி தீர்மானமாக வெற்றி அடையமுடியாது. ஆனல் இப்பொழுது ஜெர்மனியும் யுத்தத்தை நீடித்து நடத்தும்படி நிர்ப்பந்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது அமெரிக்கா தன்னுடைய டாங்கிகளையும், விமானங்களையும், யுத்ததளவாடங்களையும் படைகளையும் ஐரோப்பாவுக்குக் கொண்டு வருகிறபடியால் ஐரோப்பா கண்டத்தில் தரைமார்க்கமாயும், ஆகாய மார்க்கமாயும் தாக்குதல் ஏற்படக்கூடியதற்கு ஜெர்மனி பயமடைந்திருக்கவேண்டும்.

கிழக்குப் பக்கத்தில் ஜெர்மனி ஜயம் பெற்றும்கூட இந்த யுத்தத்தில் அதற்கு ஏற்படும் தோல்வியைத் தடுக்கமுடியாது.

5. கடுமையான ஆகாயவிமான வெடிகுண்டு தாக்குதல்கள் ஜெர்மனியின் பேரில் துவக்கப்படுகின்றன. அவைகளினல் ஜெர்மன் பொதுமக்களின் உணர்ச்சி குன்றிவிடும். அதன் கைத்தொழில்களும், தொழிற்சாலைகளும், கப்பல் கட்டுமிடங்களும், சதாகாலமும் வெடிகுண்டுகள் வீசப்பட்டுப் பொடி பொடியாக்கப்படும்.

6. முடிவாக ஜனங்களின் மனப்பான்மையில் பயன் எப்படியுள்ளது என்பதையும் கணக்கிடவேண்டும். ஜெர்மன் ஆதிக்கத்திற்கு அடிமையாக்கப்பட்ட ஐரோப்பிய தேசத்தார்கள் எல்லோரும் ஜெர்மனிக்கு எதிரிகளாக இருந்து கொண்டு சமயம் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் இழந்த ஸ்வதந்திரத்தைத் திரும்பப் பெறுவதற்காக சண்டை செய்யத் தயாராக இருக்கிருர்கள். நேசதேசத்தார்கள் ஐரோப்பா கண்டத்தில் இறங்கினல் இவர்கள் கலகம் செய்வார்கள். இப்பொழுது ஐரோப்பாவின் நிலைமை ஜெர்மனிக்கு பலஹீனமாக இருக்கிறது. ஜனநாயகக் கக்ஷிக்கு பலம் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. இது காரணத்தினல்தான் யுத்தம் நீடித்து நடப்பதில் ஜனநாயகங்கள் வெற்றிகிடைக்கும் என்று நம்பியிருக்கின்றன. நாட்கள் ஆகஆக யுத்தத்தில் அதிர்ஷ்டம் அவர்கள் பக்கம் திரும்பும். இது காரணத்தினல்தான் இந்தப் போர்முனைகளில் அவர்களுக்கு ஏற்பட்ட தோல்விகளைப் பொருட்படுத்தாமல் இருந்திருக்கிருர்கள். அவர்களுக்கு நேரிட்டிருக்கும் கஷ்டங்களையும் நிச்சிந்தையாகப் பொறுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 97—(4-வது பிரிவு).

1942—

| | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| மே | ...30, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| | 31, | ஞாயிற்றுக்கிழமை. | நீர்ப்பழனி ... | ,, | 6.00 |
| | | | ஆவூர் ... | ,, | 6.30 |
| ஜூன் | ... 1, | திங்கட்கிழமை ... | காரையூர் ... | ,, | 6.00 |
| | | | இடையாத்தூர் ... | ,, | 6.30 |
| | 2, | செவ்வாய்க்கிழமை | அண்டக்குளம் ... | ,, | 6.00 |
| | | | கிள்ளனூர் ... | ,, | 6.30 |
| | 3, | புதன்கிழமை ... | கீரனூர் ... | ,, | 6.00 |
| | | | நாஞ்சூர் ... | ,, | 6.30 |
| | 4, | வியாழக்கிழமை . | வடவாளம் ... | ,, | 6.00 |
| | | | செம்மட்டிவிடுதி ... | ,, | 6.30 |
| | 5, | வெள்ளிக்கிழமை ... | நார்த்தாமலை ... | ,, | 6.00 |
| | | | உப்பிலியக்குடி ... | ,, | 6.30 |

### பிரஸங்கம் 98—(5-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 6, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் ... | மாலை | 6.30 |
| 7, | ஞாயிற்றுக்கிழமை. | திருவரங்குளம் ... | ,, | 6.00 |
| | | வம்பன் ... | ,, | 6.30 |
| 8, | திங்கட்கிழமை ... | மலைக்குடிப்பட்டி ... | ,, | 6.00 |
| | | தொலையானூர் ... | ,, | 6.30 |
| 9, | செவ்வாய்க்கிழமை. | குளவாய்ப்பட்டி ... | ,, | 6.00 |
| | | கீழையூர் (தெற்கு) ... | ,, | 6.30 |
| 10, | புதன்கிழமை ... | வெள்ளனூர் ... | ,, | 6.00 |
| | | செம்பாட்டூர் ... | ,, | 6.30 |
| 11, | வியாழக்கிழமை ... | புலியூர் ... | ,, | 6.00 |
| | | கண்ணங்குடி ... | ,, | 6.30 |
| 12, | வெள்ளிக்கிழமை... | பள்ளிவாசல் ... | ,, | 6.00 |
| | | பில்லமங்கலம் ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—1-6-42.